உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௰] ஆங்கிரஸஹு ஐப்பசிமீ [பகுதி-௧௨.
Vol. XXX. October-November-1932. No. 12.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௨௫௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

கார்காலத்தால் இராமன் விரகவேதனை மிகுதல்.

500 தேரைக் கொண்டபே ரல்குலாள் திருமுகங் காணான்,
ஆரைக் கண்டுயி ராற்றுவான்? கல்லுணர் வழிந்தான்:
மாரற் கெண்ணில்பல் லாயிர மலர்க்கணை வகுத்த
காரைக் கண்டனன், வெந்துயர்க் கொருகரை காணான்.

இ-ள். சீதையின் முகத்தைக் காணான இராமன், மன்மதனுக்குப் பல ஆயிர (க் கணக்கான) புஷ்பபாணங்களை உண்டாக்கி (உதவி)ய கார்காலத்தைக் கண்டு கொடிய (விரக) வேதனைக்கு ஒரு கரையுங் காணாதவனாய் அறிவழிந்தவனானான், (சீதையைக் கண்டு தன் பம்ரீக்கிலன்றிச் சிவனை யிழந்துவிடுவானாயிருந்த அவன் அவளை யன்றி வேறு) யாரைக்கண்டு உயிர்தரித்திருப்பான்?

ஆற்றுதல்-தாங்குதல்-தரித்தல்-சுமத்தல். மாரன்-மன்மதன். ஆயிரம், அளவின்மைகுறித்தது. மேகம், மழைபெய்து பூஞ்செடிகள் கொடிகள் மரங்களை நிரம்பப் பூக்கும்படிசெய்தது, காமுகரை எய்து துன்புறுத்தற்குப் பூக்களாகிய அம்புகளை மன்மதனுக்குக் கொடுத்ததாக உருவகிக்கப்பட்டது. நான்கு திசைகளிலுமுள்ள நான்கு கரைகளுள் யாதாயினும் ஒன்றையுங் கண்டிலனென்பார், கரைகாணானெனக் கூறாது ஒருகரை காணானென்றார். செய்யுளாதலால், ஒருகரையுங் காணானென்பது ஒருகரை காணானென உம்மை தொக்கது.

‘“காரைக் கண்டனன்; கரை காணான்” என்றவிடத்து ஒருவகைச் சொற்சமத்காரம் காண்க. கண்டனன் காணான் என மாறுபடச் சொற்கள்வந்தது தொடைமுரண்.’

காமனால் தவசிகளும் கலங்குங் கார்காலத்தில் இராமன் கலங்குதல் வியப்பன்றெனல்.

[காமத்தை யெழுப்பி வளர்க்குங் கார்காலத்தில் முற்றத்துறந்த முனிவரும் மனவுறுதிதளருதல் சகசமாதலால், அந்தக்காலத்தில், எல்லாநலங்களும் இனிதமைந்த சீதாதேவியுடன் கூடியாடிக் குலாவி இன்புற்று வாழ்ந்திருந்த இராமன் விரகவேதனை மிகுதியாக வருந்தியது வியப்போ? அவ் வருத்தத்தால் மனங்கலங்கிச் சித்தப்பிரமையுற்றான்.

இராமன் விரகவேதனைமிகுதியால் சித்தப்பிரமைகொண்டு மேக முதலியவைகளை நோக்கிப் புலம்பல்.

இராமன் மேகத்தை நோக்கி, மேகமே! சீதையைக் கவர்ந்து ஒளித்துவைத்திருக்கும் தீயோனது ஊருந் தெரியேனாய்ப் பெருந்தீங்கு செய்த அவனுக்குச் சிறுதீங்குஞ் செய்யமாட்டாமையால் செத்தொழியாது உயிர்சுமந்து உழன்றுதிரியும் யான் அந்தப் பாவியாற் கலங்கியிருப்பது காணாதென, அதிகமாகக் கலக்கச்செய்கின்றாயே. சீதையின் மேனிபோலும் மின்னலை அடிக்கடி தோன்றி மறையச்செய்தலால், அவளைக் காட்டிக்காட்டி மறைக்கின்றாய்போல்கின்றாய். இவனுக்குச் சீதையைக் கொடுத்தல் செய்யவில்லையாயினும், காட்டவாவது செய்வோமென்று என்பால் இரக்கங்கொண்டாயோ? (சிறுவர்க்குத் தின்பண்டங் காட்டிக், கொடுக்காதுமறைப்பார்போல, என்னை ஏமாற்றி விளையாடுகின்றாயோ?). இராக்கதரது கரிய பெரிய வடிவம்போலக் கறுத்துப் பெருத்த உருவமுடையாய். அவர்கள் அந்தரத்தில் சஞ்சரித்துக் கோரப்பல்லாலும் வெடிக்குங் குரலாலும் ஆரையும் அச்சமுறச்செய்தல் போல, நீயும் வானில் உலாவி மின்னலாலும் இடிக்குங் குரலாலும் எல்லாரையும் பயமடையச்செய்கின்றாய். அவரேபோல, உயிர்கொண்டாலன்றி யொழியாய்போலும் என்றும்—மயிலை நோக்கி, மயிலே! உன் சாயலால் சீதையை நினைப்பூட்டுகின்றாய். அவளைக் கொண்டுவந்து கொடுத்து மகிழச்செய்யாது வருந்தச்செய்கின்றாய். நீ கொடியாய்

என்றும்—பூங்கொடியைநோக்கிச், சீதையின் இடையழகை நினைவுறுத்தி வருத்துங் கொடியே! என்னைத் தாக்கித் துன்புறுத்தும் மழைவாடை வீசலுக்கு இசைவாக ஆடி நீயும் வருத்துகின்றாயே என்றும்—மானை நோக்கிச் சீதை யிருக்குமிடத்தைச் சொல்லென்றும்—தன் உயிரை நோக்கி, உயிரே! பிராணனாகிய உனக்கும் பிராணநாயகியாகிய சீதைக்கும் உள்ள சம்பந்தத்தைத் தெரியாயோ, தெரிந்திருந்தால் அவளோடு பிரிந்திருப்பாய், பிரிந்திருந்தால் யான் இத்துன்பத்தை அறிந்திரே னென்றும் புலம்பினான்.]

இராமன் மழைவாடைக்கு வருந்திப் புலம்பல்.

501 ஓடைவாள் நுதலி னாளை ஒளிக்கலாம் உபாயம் உன்னி
நாடிமா ரீச னார்,ஓர் ஆடக நவ்வி ஆனார்;
வாடையாய்க் கூற்றி னாரும், உருவினை மாற்றி வந்தார்;
கேடுசூழ் வார்க்கு வேண்டும் உருக்கொளக் கிடைத்த வன்றே

இ-ள். (முன் என்னைத் துன்புறுத்தச்) சீதையை (இராவணன் கவர்ந்து) ஒளித்தற்கேற்ற உபாயத்தை ஆலோசித்துத் தேடி (யறிந்து) மாரீசனார் பொன்மான் ஆனார்; (இப்போது என்னைத் துன்புறுத்த) எமனார் மழைவாடையாகத் தம் வடிவத்தை மாற்றி வந்தார்: (எனக்குத்) தீங்குசெய்யக்கருதுவார்க்கு (அவர்கள்கருத்தை நிறைவேற்றுதற்குத் தக்கனவாக அவர்கள்) வேண்டும்வடிவங்கள் (அவர்கள் இட்டப்படி) கொள்ளக் கிடைக்கின்றன. (இந்தக்கொடுமையை என் என்பேன்!).

ஓடை=நெற்றிப்பட்டம். ஆடகம்=பொன். நவ்வி=மான்.

'மாரீசனார், கூற்றினார் என்ற பன்மைகள், கோபம்பற்றியன; இகழ்ச்சிக்குறிப்புமாம்.'

இராமன் மன்மதனைக்கண்டதாகக்கருதி அவனைநோக்கிக் கூறுதல்

[சித்தப்பிரமையுற்றிருந்த இராமன், மன்மதனைக்கண்டதாக எண்ணி 'ஏ மன்மதா! என்னெஞ்சு புண்ணாக, நிரம்ப அம்புகளெய்தாய். இவ்வளவுபோதும், இனி என் எதிரே நில்லாதே, போ. என்னைக் காக்க இலக்குமணனிருக்கின்றான் நீ என்னைத் துன்புறுத்தலை அவன் கண்டால், தடுக்கமுடியாத அவன்கோபத்தால் அதமாய்விடுவாய்' என்று கூறிப் புலம்பினான்.

தன்னைக் காக்க இலக்குமணனிருக்கிறனேன்று புலப்பத்திற்கூறிய இராமனை இலக்குமணன் தேற்றுதல்.

இலக்குமணன், இராமனை அணுகிநோக்கிச் 'சீதையைத்தேடுதற்கு இடையூறாக உள்ள கார்காலம் நீண்டதாயிருக்கிறதென்றோ, இராக்கதர் வெலற்கரியரென்றோ, வானரசேனை வரவில்லையென்றோ, மற்றெது கருதியோ, மனந்தளர்கின்றாய்? வேதநெறி பேதமெய்தினாலும், மண்ணும் விண்ணும், மதியும் கதிரும், மற்றெவையும் மாறினாலும், ஒருசிறிது நிலைகுலைதலும் உன்பால் நிகழமாட்டாதே. கார்காலம் கழிந்துவிட்டது. அரக்கரை அழிக்கும் அறிவும் ஆற்றலுமுடைய அநுமானாதி வானரர்சேனை வந்துவிட்டது. சீதை திரும்பிவிட்டாள். துன்பம் தொலைவாயாக' என்று தேற்றிச் சித்தப்பிரமை தீரச்செய்தான்.

இராமன் தன்னுணர்வுவந்தபின்னும் தளர்தல்கண்டு, இலக்குமணன், 'நீ செயமடைதல் திண்ணம். இவ்வாறு தளர்தல் உன் வீரத்துக்கு ஏற்றதன்று. உடனே செயமடையவொண்ணாமற் கார்காலம், சிறிதுபாகம், கழியாதிருக்கின்றதென்பதொன்றுண்டு. அது பிறர்க்குத் தடையாமன்றி, உனக்குத் தடையாகமாட்டாது. காலங்கடந்த உனக்குக் காலத்தடை யேது. நீ இப்போதே செயிக்க உன்னினால் அதற்கு எத்தடையும் இல்லாததாய்விடும். உனக்கு நீயே நிருமித்துக்கொள்ளுந் தடையன்றி வேறுதடை யாதுமில்லை. ஆதலால் வருந்துதலொழிவாயாக' என்றான்.]

502 திரைசெய்அத் திண்கடல் அமிழ்தம் செங்கணான்
உரைசெயத் தரினும்அத் தொழில் உவந்திலன்:
வரைமுதற் கலப்பைகள் மாடு நாட்டித்தன்
குரைமலர்த் தடக்கையாற் கடைந்து கொண்டனன்.

இ-ள். 'திருமால் (அமிழ்தம் கொடு என்று) கட்டளையிட்டமாத்திரத்திலே, பாற்கடல் அமிழ்தத்தைக் கொடுக்கக்கடவதாயிருந்தும், (கட்டளையிடுவதான இலகுவான) அந்தச் செய(லால் உடனே அமிழ்தம் பெறுத)லை விரும்பானாய், (அதனைக் கடைந்தெடுத்தற்குக் கருவிகளான மந்தர) மலை முதலிய உபகரணப்பொருள்களை (அவைகளிருந்த தூரமான இடங்களிலிருந்து கொண்டுவந்து ஒன்றுசேர்த்து அந்த)க் கடலிலே

நாட்டித் தன் கைகளினால் (சிரமப்பட்டுக்) கடைதல்செய்தே (அமிழ்தத்தை எடுத்துக்) கொண்டான். (கேவலம் நினைத்தலாலேயே நினைத்தகாரியத்தை நீ நிறைவேற்றவல்லையாயினும், அவ்வாறு செய்யாமல் தக்ககாலத்தில் தக்கதுணைவரைக்கொண்டு செய்தற்குரியவற்றைப் பலமுறை சிந்தித்துத் தெளிந்து செய்து செயமடைவாயாக' என்று இலக்குமணன் சொன்னான்.)

திரைசெய்—அலைகளை உண்டாக்குகின்ற—அலைவீசுகின்ற. 'அகரச் சுட்டு பிரசித்திபற்றியது'. திண்—வலிமையுடைய. செங்க(ண்)ணன் இங்கே திருமாலைக்குறித்தது. உரைசெய—சொல்ல. கலப்பைகள்-உபகாரணப்பொருள்கள். மாடு-இடம், இங்கே கடலினிடத்து எனப் பொருள் கொள்ளநின்றது. குரை மலர் தடம் கை-(ஆபரணங்கள்) ஒலிக்கின்ற (தாமரைப்) பூப்போன்ற விசாலமான கைகள்.

கார்கால முடிவில், கார்மேகம் வெண்மேகமாகுதல்.

[இப்போது காலை, இப்போது நடுப்பகல், இப்போது மாலை யென நேரந்தெரியாதவாறு எப்போதும் சூரியனை மூடியிருந்த நீர் நிறைந்த கார்மேகம், நீர் முழுவதையும் பொழிந்து மேற்கொண்டு பெய்ய நீரின்றி வெண்மேகமானபோது, உள்ளபொருள்களொன்றும்விடாம லுதவிப் பொருளற்றபோது ஏற்பார்க்கு ஈய இயலாமையால் வெள்கி வெளிறும் வள்ளலை ஒத்தது.]

மேகம் நீங்கச் சந்திரன் விளங்கினது, மறைத்த திரை நீக்கப்பெற்ற மாதர் முகம் போன்றது.

503 கடம்திறந் தெழுகளி றனைய கார்முகில்
இடம்திறந் தேகலிற் பொலிந்த திந்துவும்,
நடம்திறன் நவில்வுறு நங்கை மார்முகம்
படம்திறந் தொருவலிற் பொலியும் பான்மைபோல்.

இ-ள். (கரிய) யானைபோன்ற கார்மேகம் (தான் தங்கியிருந்த வானத்தின்) இடத்தை (வெளியாம்படி நீங்கி)த் திறந்து சென்றுவிட்டதனால் (அம் மேகத்தால் மறைக்கப்பட்டிருந்த) சந்திரன், (மறைந்திருந்த) திரைச் சீலை திறக்கும்படி உருவப்பட்டதனால் (மறைக்கப் பட்டிருந்த), நாட்டியமாதர்முகம் விளங்குதல்போல விளங்கலுற்றது.

கடம்-யானைக்கதப்பு-யானையின்கன்னம். கடம் திறந்து எழு களிறு அனைய—கன்னம் (அதன்கணுள்ள மதநீர்வெளிப்படும் துளை) திறக்கப்பட்டு (மதம் பொழிந்து கொண்டு) புறப்படுகின்ற (கரிய) யானை போன்ற. கார் முகில்-கருமை (நிறமுடைய) மேகம்; கார்காலத்துமேக மெனலுமாம். யானை, மேகத்துக்கும், மதநீர்பொழிதல், மழைநீர்பொழி தலுக்கும் உவமை. கருநிறமும் கதியும் முழக்கமும் யானைக்கும் மேகத் துக்கும் பொதுக்குணங்கள். இந்து-சந்திரன். நடம் திறம் நவில்-நட னத்தைச் சாமர்த்தியமாகச்செய்கின்ற. படம்-திரைச்சீலை. பான்மை-குணம்-தன்மை. படம் திறக்க என்பதில் திறக்க, திறந்து எனத் திரிந்து நின்றது. 'சொல்திரி யினும்பொருள் திரியா வினைக்குறை'. (வினைக் குறை-வினையெச்சம்).

இப்பாட்டிலுள்ள ஒப்புமைநயம் ஊன்றிநோக்கி உவக்கத்தக்கது.

கார்காலம் கழிந்தபோது நிகழ்ந்த நிகழ்ச்சிகள்.

[(இருள் நீங்க இராக்காலம் நீங்குதல்போல) கார்மேகம் ஒழியக், கார்காலம் கழிந்தது. அப்போது, எல்லாரும் ஒன்றாகச்சேர்ந்து பாடம்படிக்கும் பள்ளிப்பிள்ளைகள்போல, எல்லாம் ஒருமித்துக் கத்திக் கொண்டிருந்த தவளைகள் வாயடங்கின. சிறைவிரித் தாடிக் களித்த மயில்கள், சிறைகளை ஒடுக்கிச், சிறையில் ஒடுங்கியிருந்த சீதைபோலச் சோர்ந்திருந்தன. மழைக்கொதுங்கிப் பதுங்கியிருந்த பறவைகள் சீதையைத் தேடுங்காலம்வந்ததென்று எங்குந் தேடிச்செல்வனபோலப் பலதிசைகளிலும் பறந்துசென்றன.]

கார்காலப்படலம் முற்றிற்று.

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்

பரிமேலழகரும் மணக்குடவரும்.

[உஉஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

கடவுள்வாழ்த்து.

இவ்வதிகாரத்திற் பரிமேலழகர்கொண்ட குறள்வைப்புமுறை வேறு; மணக்குடவர்கொண்ட வைப்புமுறை வேறு. இங்ஙனமே மீள மாறுபட்டுள்ளார்கள்.

பரிமேலழகர், 'அகரமுதல' 'கற்றதனாலாய' 'மலர்மிசை' 'வேண்டுதல்' 'இருள்சேர்' 'பொறிவாயில்' 'தனக்குவமை' 'அறவாழி யந்தணன்' 'கோளில்' 'பிறவிப்பெருங்கடல்' என முறைப்படுத்தி யுள்ளார்.

மணக்குடவர், 'அகரமுதல்' 'கற்றதனாலாய' 'மலர்மிசை' 'தனக்குவமை' 'அறவாழியந்தணன்' 'வேண்டுதல்' 'இருள்சேர்' 'பொறிவாயில்' 'பிறவிப்பெருங்கடல்' 'கோளில்பொறியில்' என முறைப்படுத்தியுள்ளார்.

பரிமேலழகர் அங்ஙன முறைப்படுத்தினமைக்குக் காரணம் முதற் குறள் கடவுளதுண்மையையுணர்த்தி நிற்றலும், 'கற்றதனாலாய' என்பது பொதுவாக முக்கரணவழிபாட்டையும், 'பிறவிப்பெருங்கடல்' என்ப தொழிய மற்றையவை முக்கரணவழிபாட்டை யுடம்பாட்டுமுகத்தானு மெதிர்மறைமுகத்தானு முணர்த்திநிற்றலும், 'பிறவிப்பெருங்கடனீந்துவர்' என்பது அவ்வழிபாட்டையேயுணர்த்தி *நியமித்துநிற்றலுமே யாம். 'மலர்மிசை' 'இருள்சேரிருவினையும்', 'பொறிவாயில்' என்னும் முக்குறளும் உடம்பாட்டுமுகத்தான் மனமொழிமெய்களின் வழிபாட்டைத் தனித்தனியுணர்த்திநிற்றலையும், 'தனக்குவமை' 'கோளில்' என்னுமிருகுறளும் எதிர்மறைமுகத்தான் அவ்வழிபாட்டையுணர்த்தி நிற்றலையுங் காண்க. வணங்காத்தலை பயனில வெனவே வாழ்த்தா நாவும் பயனிலவா மென்பது பெறப்படவைத்ததாகக் கருதினர்; பத்துக் குறளே ஓரதிகாரமாகவிகழ்தலினென்க.

---

*"பெற்றதன் பெயர்த்துரை நியமப் பொருட்டே"

மணக்குடவர் அங்ஙனம் முறைப்படுத்தினமைக்குக் காரணம் 'அகரமுதல' 'கற்றதனாலாயபயன்' என்னு மிருகுறளும் கடவுளதுண்மை கூறுதலும், கற்றலின்பயனாக வணக்கத்தை யுணர்த்திநிற்றலும், 'கோளில்பொறியில்' என்பதொழிந்தன வணக்கத்தின் இம்மை மறுமைப்பயன்களை யுணர்த்தி நிற்றலும், 'கோளில்' என்பது வணங்காத வுடம்பை யிழித்துநிற்றலுமேயாம். இம்மைப்பயன் 'மலர்மிசை' என்னுங் குறளாலுணர்த்தப் படுவதாகக்கொண்டுள்ளார். மறுமைப் பயன்=வீடு. என்பது அவர்கருத்து. அவ்வீடாவது=அவலக்கவலை கையாற்றினீங்கிப் புண்ணிய பாவ மென்னு மிரண்டனையுஞ் சாராமற் சாதலும் பிறத்தலுமில்லாத தோரு தன்மை என்பது அவர்கொள்கை. 'தனக்குவமை' என்பதனாற் கவலை கெடுமெனவுணர்த்தியதாகவும், அறவாழியென்பதனால் காமமும் பொருளும்பற்றிவரும் அவலங் கெடுமெனவுணர்த்தியதாகவும், 'இருள்சேர்' என்பதனால் புண்ணியபாவம் என்னு மிரண்டு முளவாகாவென வுணர்த்தியதாகவும், 'பொறிவாயில்,' 'பிறவிப்பெருங்கடல்' என்பவற்றாற் சாதலும் பிறத்தலு மின்மையை யுணர்த்தியுள்ளதாகவும் கருதுகின்றனர்.

ஆனால் இஃது அவலங்கெடுமென்றது இது கவலைகெடுமென்றது என்று எழுதியதுபோல இது கையாறுகெடுமென்றது என்று எழுதுவதற் கொருகுறளு மவர்வசப்பட்டிலது. ஆதலின் எழுதியபடியே முடித்திலர்.

அன்றியும், 'வேண்டுதல்வேண்டாமை' யென்னுங்குறள் அவர் எடுத்துக்கொண்ட வீட்டிலக்கணத்து ளொன்றையும்பற்றிநிகழாதுநிற்றலால், காமமும் பொருளும் ஆகாவென்றற்கு 'வேண்டுதல்வேண்டாமை யிலான்' எனப் பெயரிட்டார் என வலியற்ற சமாதானமொன்று எழுதிச்செல்கின்றனர். இதுபற்றிப் பின்னு மாராய்வல்.

இனிப் பரிமேலழகர் 'கற்றதனாலாயபயன்' என்னுங்குறள் முக்கரணவழிபாட்டையும் பொதுவாகக்கூறுதலல்லாமலும் அம்முக்கரணத்தால் வழிபட்டுப் பிறவிப்பிணியறுதல் கல்வியறிவின்பயன் என வுணர்த்தலும், 'அகரமுதல' என்பதற்குப் பின்னிற்றற்கேதுவாயிற்றெனக்கருதியுள்ளாரென்பது, 'ஆகம அறிவிற்குப்பயன் அவன்றாளைத்தொழுது

பிறவிப்பிணியறுத்தலென்பது இதனாற் கூறப்பட்டது' என அக்குறளுரையிலெழுதியிருத்தலால் வெளிப்படுகின்றது.

தொழல் என்பது கைகளின் வழிபாட்டு வினையன்றோ முக்கரணத்திற்கும் பொதுவாதலெங்ஙனமமையுமெனின் நன்றுகூறினாய்! 'தொழுதகையுள்ளும்' 'தொழுதகைதலைமேலேற' 'கைகொள்கூப்பித் தொழீர்' 'கையாற்றொழுதே' 'கைதொழூஉப்பரவி' 'கைகள்கூப்பித் தொழுதெழுந் தத்திசை' என வருவன முதலியவற்றால், தொழுதல் கையின் வினையாமென அறிதலுண்மையாயினும்,

'ஆலயந் தொழுவது சாலவு நன்று'

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்'

'தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது'

'தொழுநா ளிதுவெனத் தோன்ற வாழ்த்திப்
பீடுகெழு நங்கை பெரும்பெய ரேத்தி
வாடா மாமலர் மாரி பெய்தாங்
கமரர்க் கரசன் றமர்வந் தேத்த' (சிலப்பதிகாரம்)

என வருவனமுதலியவற்றால் மற்றையகரணங்கட்கும் மற்றைய வுடம்பினங்கங்கட்குமுரியவாமென அறியுமாறு புலப்படல் காண்க.

அன்றியும், 'மனமொழி மெய்களிற் றொழுதவனருளால்'
(சங்கரநமச்சிவாயப்புலவர்.)

என விளக்கமுற முக்கரணத்திற்கும் பொதுவாக நிகழ்தல் காண்க.

மணக்குடவரும் பொதுவாகத் தொழாராயின் என எழுதியதோடமையாது வணங்குதல் என்னும் பொருள்பட 'மீண்டும் வணக்கங் கூறியது எற்றிற்கு' என எழுதிச்சேறலை நோக்குக.

அன்றியும், ஈண்டுத் 'தொழல்' என்பது கையாற்றொழலையே யுணர்த்திற்றெனக்கொள்ளின், "மனத்துக்கண் மாசில னாதலனைத்தற-னாகுல நீர பிற" என்பது முதலியவற்றால் மனத்தாற்செய்யும்வினையே சிறந்ததாமெனத் தோன்றவைத்தவர் மனத்தானன்னலையுணர்த்தாது முதலிற் கற்றதன்பயன் கையாற்றொழுதலெனக்கூறுவாரா? மனத்தன்பில்வழிக் கையாற்றொழுதலும் பயனற்றதாமே? என்னுமாகலிற் இறைமொழிய வேலாதாமென்க.

ஆதலால் 'தொழல்' என்பது கைக்கே சிறப்பாய் மற்றையவிடத்துஞ் செல்லுமென்க.

அகர முதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

பரிமேலழகர்.

இவர் இக்குறளில் 'அகரமுதல' 'ஆதிபகவன் முதற்று' என்னும் இருதொடர்மொழிகளையும் தனித்தனி பண்புத்தொகைநிலைத்தொடர்மொழியாகக்கொண்டு அவற்றின் அங்கமான 'முதல' 'முதற்று' என்னும் இரு தனிமொழிகளையும் முதலையுடையன, முதலையுடைத்து என இரண்டனுருபு விரியப் பிரித்து உரைகண்டுள்ளார்.

(அகரமாகிய முதலையுடைடன. ஆதிபகவனாகிய முதலையுடைத்து என.)

மணக்குடவர்.

இவர் அவ் விருதொடர்மொழிகளையும் இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகக்கொண்டு அவ் விரு தனிமொழிகளையும் 'முதலாகவுடையன' 'முதலாகவுடைத்து' என 'ஆக' என்னும் சொல்லை இடையிற் பெய்து பிரித்து உரைகண்டுள்ளார்.

(அகரமாகிய எழுத்தைத் தமக்கு முதலாகவுடையன. ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாக வுடைத்து என.)

"அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பி னானுமென்
றப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும்." (தோல். சொல்.)

என்னுஞ் சூத்திரங்கொண்டு 'முதல' 'முதற்று' என்னும் பகுபதங்களை (பிரிமொழிகளை) நோக்குங்கால் அவை அதுச்சொல்வேற்றுமையடியாகத் தோன்றிய வினைக்குறிப்புக்களெனவே தெற்றெனவிளங்கும்.

அவ் வுடைமைப்பொருளடியாகத்தோன்றிய வினைக்குறிப்புக்களை விரித்து விளக்குங்கால் இரண்டனுருபு இடையில் விரியவே விரியும்

எனல் சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்க் குடம்பாடானதொன்றுமென்பதை அவரெழுதிய உரைகளைநோக்கின் அறியலாம்.

பொன்னன், கச்சினன், கழலினன் என்பன முதலியவற்றை விரித் துரைக்குங்கால் பொன்னையுடையவன், கச்சினையுடையவன், கழலினை யுடையவன் எனவோ, பொன்னைப்பெற்றவன், கச்சினைக்கட்டினவன், கழலினைத்தரித்தவன் எனவோ இரண்டனுருபு இடையிலேவிரிய விரிந்து நிற்கும். அவ்வாறே 'முதல' 'முதற்று' என்பவையும் முதலையுடையன, முதலையுடைத்து என இரண்டனுருபு இடையில்விரியுமாறு விரித்தலே சாலச்சிறக்கும். அதனால் 'அகரமுதல' 'ஆதிபகவன்முதற்று' என்ப வற்றின்கண் அகரமாகியமுதலையுடையன, ஆதிபகவனாகிய முதலை யுடைத்து என இடையில் பண்புருபைவிரித்தலுஞ் சிறந்ததாயிற்று.

ஆயின் இறைவனை உடைமப்பொருளெனக் கூறலாமோவெனின், ஈண்டு உடைமைப்பொருளென்றதனை ஒன்றற் கடங்கியபொருளென்று வது, அடிமைப்பொருளென்றுவது கொள்ளற்க; எவ்வகையிலேனுஞ் சம்பந்தமுடைய பொருளாமெனக் கொள்க. சம்பந்தம், உடைமை, உரிமை, கிழமையென்பன ஒருபொருட்சொற்களாமென்க. எமதிறை வன், எம்முதல்வன், எம்முடையிறைவன் என வழக்குண்மையுங் காண்க.

உடையன, உடைத்து என்பவற்றை நோக்கியன்றே முதலையென இரண்டனுருபு விரிக்கவேண்டியதாயிற்று; அவற்றைநோக்கி அகரம் ஆதிபகவன் என்பவற்றினீற்றின் அவ்வுருபை விரிக்கினும் பொருந்து மன்றே; பொருந்துமெனின், 'முதல் என்னும் முன்னிலை (பகுதி) யீற்றின்கண் அவ்வுருபை விரிக்கவேண்டுவதில்லை; அங்கு விரிக்கவியலா தெனின் இங்கு விரித்தல் இன்றியமையாததாம்; அங்கு விரிக்க இயலு மேல் இங்கு 'ஆக' வென்னுஞ்சொல்லை விரித்தாலென்னை? எனின்; அகர முதலுடையன, ஆதிபகவன் முதல்உடைத்து என்றேனும் அகரத்தை முதல, ஆதிபகவனைமுதற்று என்றேனும் வரின் அகரமாகிய எழுத்தை முதலாகவுடையன எனவும், ஆதியாகிய பகவனை முதலாகவுடைத்து

எனவும் விரித்து உரைகூறலாம்; உருபும் பயனும் உடன்றொக்க கைக் களிறு முதலிய தொடர்களையும் முதல முதலிய தனிப் பிறிமொழிகளையும் (பகுபதங்களையும்) விரிக்குங்கால் உருபும் பயனும் உடன்விரியக் கையை யுடைய களிறு, முதலையுடையன என விரியுமன்றி உருபோரிடத்தும் பயனோரிடத்தும் விரியாவென்க.

அன்றியும், அங்ஙனம் விரித்தல் குற்றமிலதாமென்பாருளராயினும் அங்ஙனம்விரித்தலாற் பயனென்னை யென வினவி விடுக்க.

அன்றியும், ஈண்டு அங்ஙனம் விரித்துப் பொருள்கூறினால், அகரமும், ஆதிபகவனும் தாமாகவே முதலாகாமல் எழுத்துக்களாலும் உயிர்களாலும் *முதலாக ஆக்கப்பட்டன எனவும், பல முதற்பொருள்களுள்ளன; அவற்றுள் இவை இவற்றையேகொண்டன எனவும் பெறப்படுமன்றே? அதனாலும் அங்ஙனம் விரித்தல் பொருந்தாதென்க.

இனி, சிலர், இக்குறளில் 'ஆதிபகவன்' என்பது பெயர்மாத்திரையாக நிற்கின்றதெனவுணராமல் 'முதல்' என்றாலும் ஆதியென்றாலும் ஒருபொருளனவேயன்றோ? இருதாம் ஒருபொருளே பெறப்படும்படி கூறுதல் குற்றமன்றோ என்பர். அவர் இந்நூலிலேயே பின்வரும் "அடியளந்தான் தாஅய தெல்லா மொருங்கு" என வருவதுமுதலிய பிரயோகங்களையும் "உளைப்பூ மருதி னொள்ளிணர் அட்டி" என்பது முதலியவாகப் பிறாண்டு வரும் பிரயோகங்களையும் கண்டு தெளிக.

அன்றியும், ஆதியென்பதற்கு வேறுபொருளுளதென வல்லார் கூறினுங் கூறுவர்.

இனி ஆதியென்பதற்கு நூனெறியே செல்லாதார்சிலர் வெவ்வேறு பொருளுமுரைப்பர். அதனையெடுத்தெழுதலும் மறுத்தலும் பயனில் செயலாமாகலின் விடுத்தனன்.

[தொடரும்.]

பண்டித. சித. நாராயணசாமி.

*முதலாக—முதற்பொருளாக.

மதிப்புரை.

1. புலவர்புராணம்:—இது, முருகதாஸசுவாமிகளென வழங்கும் **ஸ்ரீதண்டாயுதபாணி** சுவாமிகளால் இயற்றப்பெற்றது; தமிழ்ப்புலவர் சரிதங்களைத் தெளிவான செய்யுணடையில் விரித்துரைப்பது. இதன் பெருமைகருதிச் சென்னை ஸருவகலாசங்கத்தார் பலவருடங்களில் இதன் பகுதிகளைப் பரீக்ஷாபாடமாகக் குறிப்பிட்டுவருகின்றனர்.

முன்னோர்மொழியே ஆதாரமாக, குமாரக்கடவுளின் அருள்வழிப்பட்டு, இந்நூலை முற்றுவித்ததாக இதன் ஆசிரியர் கூறியுள்ளார். தெய்வபக்தி, அடியார்பக்தி, ஆசிரியவழிபாடு முதலியவற்றால் இறைவன்றிருவருட்கிலக்காய்ப் பண்டைப்புலவர்பெருமக்கள் இயற்றிய அரும்பெருஞ்செயல்களும், இறுதியில் அவரெய்திய பேரின்பப் பெருவாழ்வும், ஆகியவற்றை வற்புறுத்திக் கற்போரை நல்வழிப்படுத்தலே இந்நூலாற் கருதிய பயனெனக் கொள்ளற்பாற்று.

தெய்வப்புலவர்களை, திருமாலடியார் சிவனடியார் என்னும் வேற்றுமையின்றிப் போற்றியிருத்தலால், இந்நூல் மதவுணர்ச்சியிற் பொது நோக்குடைமையைப் போதிக்கச் சிறந்த கருவியாய் அமைந்துள்ளது. அன்றியும், இதனால் அறியக்கிடக்கும் சமயக்கோட்பாடும் சன்மார்க்கமரபுகளும் எத்துணையோ பல. ஆகலின் இதன் சீர்மைகருதி, இதனை இயற்றிய சுவாமிகளின் குமாரர், ஸ்ரீமாந் தி. மு செந்திநாயகம்பிள்ளையவர்கள் இதன் மூன்றாம்பதிப்பை இப்பொழுது வெளியிட்டிருக்கின்றனர். இதன் முகவுரை மிகவும் நுணுகிய ஆராய்ச்சியோடு எழுதப்பட்டுள்ளது. இறுதியில், அநுபந்தமாகச் சில பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆங்காங்குள்ள கீழ்க்குறிப்புக்களும் மேற்கோட்செய்யுட்களும் பயில்வோர்க்கு மிகுதியும் பயன்றரவல்லன. இங்ஙனம் பல்லாற்றானும் செவ்வையாக அச்சிடப்பெற்ற இப்புத்தகத்தின் விலை முதலிய விவரம் வேண்டுவோர் 'கேசரி பிரிண்டிங் ஒர்க்ஸ், 150, அண்ணாப்பிள்ளைதெரு, ஜார்ஜ்டவுன், சென்னை' என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

2. மயூரகிரிக்கலம்பகம்:—மயூரகிரியென்பது குன்றக்குடியென்னுங் குமாரவேள் திருப்பதியாகும். அதனைப் புகழ்பொருளாகக்கொண்டு, கலம்பகமென்னும் பிரபந்த இலக்கணம் அமைய, இந்நூல் இயற்றப்பெற்றது. அமராவதிபுத்தூர் சைவத்திருவாளர் வயி. நாக. ராம. அ. இராமநாதன்செட்டியாரவர்கள் இதன் ஆசிரியராவர்.

இவர் நாட்டுக்கோட்டை நகரவணிகர்குலத்தில் உதித்தவர்; குடிப் பிறப்பு, கல்வி, குணம் முதலிய யாவும் ஒருங்குவாய்ந்துயர்ந்தவர்; சிவ பக்தியிற் சிறந்தவர்; கல்வியறிவின்பயன் கடவுள்வழிபாடே என்னும் உண்மை கடைப்பிடியாக ஒழுகுபவர். அன்றியும், இவர் சிறந்த நாவன்மையோடு சீரிய செய்யுட்களியற்றும் பேராற்றல் படைத்தவர்.

இங்ஙனம் இவர் இறைவன் தோத்திரமாக இயற்றிய பனுவல்கள் மிகப் பல. இம் மயூரகிரிக்கலம்பகம் அவற்றுள் ஒன்றாகும். இது சொன்னோக்கம் பொருணோக்கம் முதலிய எந்நோக்கும் இலங்குவதாய், பத்திச்சுவை முதிர்ந்து பயில்வோரைப் பரவசமாக்குகின்றது. இதனுள், அமைந்த இலக்கண இலக்கிய வழக்குவழிப்பட்ட சொற்றொடர்களும், எதுகை மோனை முதலிய தொடைவிகற்பங்களும், உவமை உருவகம் திரிபு சிலேடை முதலான அணிவகைகளும், கற்பனைமலிந்த கருத் தமைதிகளும், அகத்திணைதழுவிய துறைப்பொருட்பகுதிகளும் ஆகிய எல்லாம் ஆசிரியரவர்களின் அருந்தமிழ்ப்புலமையைப் பொருந்த வுணர்த்துகின்றன. இது நிற்க.

இவ்வாசிரியரியற்றிய வேறு சில தனிப்பாடல்களும் இக்கலம்பகத் துடன் ஒருசேரத் தொகுத்து அச்சிடப்பெற்றுள்ளன. அவை ஸ்ரீகற்பக விநாயகர்முறையீடு, மயின்மலைமுருகன்முறையீடு, அரியக்குடி ஸ்ரீநிவாஸப்பெருமாள் திருவிழா வாகனக்கவி என்பனவாம். அவை யாவும் பெருவனப்புற்றுக் கற்பவர்நெஞ்சங் களித்திடச்செய்வன. இப் புத்தகம் வேண்டுவோர், ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

3. கன்றும் கனியுதவும்:—இது, திருவையாற்று அரசர்கல்லூரித் தமிழாசிரியர், திரு. L. உலகநாதபிள்ளையவர்களால் எழுதப்பெற்ற தொரு அரிய கதைப்புத்தகம்; தமிழ்வள்ளலாரில் தலைமைசான்ற பாரியும் அவன் மகளிரும் புரிந்த கொடைத்திறத்தினை விவரிப்பது; தூய்மையும் இனிமையும் மிக்க செந்தமிழ்நடையுடையது; வசனமா யமைந்த கதைநூல்களில முதற்றரத்தினதாய் மதித்தற்குரியது. ஆக லின் இது பள்ளியிற்பயில்வோர்க்குப் பாடபுத்தகமாகத் துரைத்தனத் தாரின் அங்கீகாரம்பெற்றுவருகின்றது.

மாணாக்கருடைய மனத்தைக் கவர்ந்து தமிழ்ப்பயிற்சியில் அவர்க் குப் பேரார்வமூட்டுமொரு இந்நூல் இயன்றுள்ளதன்மையால், இதன் ஆசிரியர் உலகிற்கு மிக்க உபகாரியாகிறார். இதன் மூன்றும்பதிப்பினை இப்பொழுது சென்னை விவேகபோதினி காரியாலயத்தினர் செவ்வனம்

அச்சிட்டு வெளியேற்றியுள்ளனர். விலை அணா 10. விலாசம்:—'மானேஜர், விவேகபோதினி காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.'

4. தண்டிகைக் கனகராயன்பள்ளு:—கனகராயனென்பார், பதின்மூன்றாம் நூற்றாண்டினிடைப்பகுதியில் அரசன்வேண்டுகோளால், குடிமுதற்சுற்றமும் குற்றிளையோரும் அடியோர்பாங்கும் ஆயமும் பின்செல யாழ்ப்பாணத்திற் குடியேறின வேளாளர்குலதிலகராவர். இவர் மரபினுள்ளாரையும் இவரையும் புகழ்ந்து கூறுவது இப்பிரபந்தம். இது மாவிட்டபுரம் சின்னக்குட்டிப்புலவரால் இயற்றப்பெற்றது; நூலாசிரியரின் காலமான பதினெட்டாநூற்றாண்டின் இறுதிப்பகுதியில், கிராமவாழ்க்கையும் கிருஷித்தொழிலும் எய்தியிருந்த நிலைமையை இன்பம் பயக்க எடுத்துரைப்பது; சிறந்த செய்யுணடையுடையது. இதன் இறுதிப்பகுதி கிடைக்கப்பெறாமல் எஞ்சிநிற்பது வருந்தத்தக்கது.

இதற்கு அரும்பதவுரை, தண்டிகை—கனகசபாபதிபிள்ளையவர்களால் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாபிவிர்த்திச்சங்க உபதலைவர் திரு. வ. குமாரசுவாமி (B A) அவர்கள் தம் நூற்பயிற்சியும் நுண்ணறிவும் கொண்டு பலவகை ஆராய்ச்சிக்குறிப்புக்களெழுதி இதனை வளமுறச்செய்து அச்சிட்டிருக்கின்றனர். இப் புத்தகம் சரித்திர அறிஞராற் போற்றுதற்குரியதாம். விலை அணா 10. விலாசம்:— 'பிரமஸ்ரீ J. T. சதாசிவஐயரவர்கள், யா. ஆ. தி. பா. வி. சங்கக்காரியதரிசி, வித்தியாகந்தோர், யாழ்ப்பாணம்.'

5. மகோற்சவசந்திரிகை:—இது, அச்சுவேலி ஸரஸ்வதிவித்தியாசாலைப் பரிபாலகராய்க் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து விளங்கும் பிரமஸ்ரீ, ச. குமாரசாமிக்குருக்கள் இயற்றியது. இதில் சிவபுண்ணியம், உற்சவவிதி, உற்சவ பஞ்சகிருத்தியம் என்னும் பகுதிகளால் எத்துணையோ பல அரிய விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. திருக்கோயில்களும் அவற்றின் திருவிழாச்சிறப்பும்பற்றிய சைவசமயக்கோட்பாடுகளெல்லாம் தக்க பிரமாணங்களோடு விரிவாக யாவருமுணர எடுத்துரைக்குமியல்பினால் இணையற்ற இப்புத்தகம் அச்சமயத்தாரனைவர்க்கும் இன்றியமையாததாகும். இதன் ஆசிரியரான குருக்களின் கைம்மாறு கருதாத பரோபகாரம் பாராட்டற்குரியது. விலை சதம் 30. விலாசம்:—'திரு. N. பொன்னையா அவர்கள், அதிபர், தனலட்சுமி புத்தகசாலை, சுன்னாகம்.'

6. புகழேந்திப்புலவர் வரலாறு:—இது கோயமுத்தூர் ஸ்ரீமாந் சி. கு நாராயணசாமி முதலியாரவர்கள் எழுதியது. முதலியாரவர்கள் பலநாளாக இத்தகைய ஆராய்ச்சித்துறையில் உழைத்துவருதல் யாவரும் அறிந்தது. அதன் பலனாக ஒட்டக்கூத்தர், படிக்காசுப்புலவர், வில்லிபுத்தூரார், அருணகிரிநாதர் முதலியோர் வரலாறுகள் வெளிவந்துள்ளன. அவற்றைப்போலவே இப் புகழேந்திப்புலவர்வரலாறும் சிறந்து திகழ்கின்றது.

புகழேந்தி ஒட்டக்கூத்தர் இருவரையும் இணைத்துக் கர்ணபரம்பரையில் வழங்கும் புனைந்துரைகள் எவரையும் மயக்குறுத்துதலின் உரிய சான்றுகள் தேடி அவற்றிலுள்ள உண்மை துணிந்து நிறுவியிருத்தல் இப்புத்தகத்தின் சிறப்பியல்பாகும். அன்றியும், இது மிகத் தெளிவான நடைதழுவிச் செல்லுவதால், பள்ளிச்சிறார்க்கும் பயன்றரவல்லது. இதுபோன்று இன்னும் பல ஆராய்ச்சிகளை இவ்வாசிரியர் வெளியிடுதல் விரும்பற்பாலது. விலை அணா 8. விலாசம்:—ஸ்ரீமாந் சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள், தாமஸ்வீதி, கோயமுத்தூர்.

7. வாழ்க்கைப்பாடங்கள்:—இது, வித்வான் திரு. N. S. சிவசுப்பிரமணிய ஐயர் M.A., அவர்களால் எழுதப்பெற்றது. கிராமவாழ்க்கையிலே காலங்கழிப்போர்க்கு அறிவுவளர்ச்சிக்குரியனவாய சிறுகட்டுரைகள் முப்பத்தைந்து இதில் அடங்கியுள்ளன. அவை உலகியலறிதல், சமூகச்சீர்திருத்தம், நாகரிகமுன்னேற்றம், கல்வி, வியவசாயம், ஒற்றுமை முதலிய பலதிறப்பட்ட பொருள்பற்றி வரையப்பெற்றன. இதன் வாக்கியங்கள் குறித்தபொருளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குகின்றன. வாழ்க்கையில் பற்றும், நவீனவுணர்ச்சிகளும், மக்களிடைபரவுவதற்கு இஃதொருகருவியாய் அமைவதாகும். விலை அணா 6. விலாசம்:—'கிராமச்சீரமைப்புநிலையம், சத்தியமங்கலம்.'

கம்பராமாயண இன்கவித்திரட்டுத் திருத்தம்.

செந்தமிழ், தொகுதி ௩0 பகுதி கக, பக்கம் உசகூல் இரண்டாம் வரியில் ஆறு பருவங்களும் என்பதற்கு முன் ' இந்த ஆரம்ப மேற்கோட் குறியையும், ஒன்பதாம் வரியில் கருதத்தக்கது என்பதற்குப் பின் ' இந்த அந்திய மேற்கோட் குறியையும் இட்டுக்கொள்க.

வே. ப. சீ.

உ

சென்னைச் சர்வகலாசங்கத்தார், ப்ரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி உ. வே. சாமிநாதையர் D. Litt. அவர்களுக்குக் "கலாநாயகம்" (Doctor of Literature) என்னும் ஆங்கிலப்பட்டம் சூட்டியதுகேட்டு, அன்னார் அருமை பெருமைகளைப் பாராட்டி அந்தாதித்தொடையிற் பாடிய

நவமணிமாலை.

நேரிசைவெண்பா.

1. தக்க'கலா நாயக'மாச் சீர்ப்பட்டம் சென்னைநகர்த்
தொக்ககலா சங்கத்தார் சூட்டினரால்—மிக்ககலை
தேர்ந்த புலவர் சிகாமணி! நின் சீரிந்நாள்
ஓர்ந்துசீர் உற்ற துலகு.

கலிநிலைத்துறை.

2. உலக மெங்கணும் ஒண்கலைக் கதிர்விரித் தோங்கும்
அலகில் பானுவை அணிவிளக் குபசரிப் பதுபோன்ம்
பலக லைப்பெரும் பொருள்படி புகழ்மிகப் பரந்தே
இலகு நிற்கிவர் அளித்தசொற் றொடைச்சிறப் பிசைந்தே.

அறுசீர்க் கழிநெடிலாசிரியவிருத்தம்.

3. தேவா லயம்பு திதொன் றுநனி சிறப்ப எடுத்த லினும்சீர்த்தி
காவா தழியும் ஒன்றைநலம் கவினத் திருத்தல்; ஆங்கதுபோல்
நாவார் புலமைப் புண்ணிய! எந் நாளுந் தமிழ்த்தொன் னூல்பலவா
ஓவா நலத்திற் பதித்துள்ளம் உவந்தாய் கலைமா விற்பனனே.

---

1. தொக்க = கூடிய; இப்பட்டம் அளித்தற்கென்றே விசேஷக்கூட்டம் (Special convocation) கூடிய என்றபடி.

2. போன்ம் = போலும். சூரியனைக் கைவிளக்கால் ஆராதிப்பதுபோலும், பொருணலம் மிக்க நூற்புகழ் சிறந்தவரைச் சொற்றொடைப்பட்டத்தாற் சிறப்பித்தது என்க.

3. புதியகோவில் கட்டுதலைவிடப் பழையதொன்றைத் திருத்திப் பரிபாலித்தல் சிறந்த தருமமாம். அத்தகையதே, புதுநூல்கள் இயற்றலைவிடப் பழந்தமிழ்நூல்களைப் பரிபாலித்தலும்,

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

4. விற்பணி வீர மாண்பும் விளங்குசீர்க் காட்சி யோங்கும்
கற்பணிக் கோவில் மாண்பும் காண்டகு தொண்ட ராற்றும்
நற்பணி மாண்பும் சான்ற நந்தமிழ் நாட்டில் தொன்னூற்
சொற்பணி மாண்பு கூட்டித் தொகுத்தனை போற்றி அம்மா!

கட்டளைக்கலித்துறை.

5. போற்றி மகிழ்வாய் புராரிபொற் பாதம் பொருந்தலர்க்கே
ஆற்றி மகிழ்வாய் அரும்பொறை சாமிநா தைய! மெய்யே
தேற்றி மகிழ்வாய் தினம்பல சீடரைச் செந்தமிழ் அச்(சு)
ஏற்றி மகிழ்வாய் பலசங்கத் தூயநூல் ஏத்துறவே.

கோச்சகக்கலிப்பா.

6. தூயஅருள் மீனாட்சி சுந்தரர்பால் நைந்திளகி
நேயமுரு குள்ளமுடை நின்மலனே! நீள்சங்கம்
மேயதமிழ் அமுதூட்டி மேதினியெல் லாம்புரக்கும்
தாயினுநற் றயையுடையாய் சாற்றுவதென் கைம்மாறே.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்—வேறு.

7. மாற்றரிய தபோநிதியாம் வரகுருசங் கராசாரியர் மதிக்கும் கீர்த்தி
சாற்றரிய தாக்ஷிணாத் தியகலா நிதியேநீச் சார்வார்க் கென்றும்
ஏற்றரிய குணநிதியே! இணையில்லாக் குருநிதியே! யாவ ராலும்
போற்றரிய புலநிதியே! புகல்நிதியே! முத்தமிழ்க்குப் புலவ ரேறே!

---

4. தமிழ்நாட்டில் வீரர்பெருமையும் கோவில்மாட்சியும் அன்பர்பணியும் மல்கியிருப்பதோடு ஐயாவர்கள் ஆற்றிய சொற்பணியும் (புத்தகப்பணியும்) சேர்ந்து விளங்குதல் சுட்டப்பட்டது.

5. புராரி - திரிபுரத்தை அழித்த சிவபிரான்; பொருந்தலர் - பகைவர்.

6. மீனாக்ஷிசுந்தரர் - தமிழ்த்தெய்வமாகிய மதுரைச் சிவபிரான்; இதுவே நமது ஐயரவர்களுக்கு வித்யாகுருவான திரிசிரபுரம் மகாவித்வான் பிள்ளையவர்கள் பெயரும். சங்கம் - கிலேடை, தாய் பாலூட்டும் சங்கு என்றும், தமிழ்ச் சங்கம் என்றும் பொருள்படும்.

7. ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடத்து ஜகத்குருவாய் விளங்கும் சங்கராசார்ய சுவாமிகள், ஐயரவர்களுக்கு தாக்ஷிணாத்தியகலாநிதி எனப் பட்டம் அளித்துள்ளது குறிப்பிடப்பட்டது. ஒரு நிதியேயன்றிப் பலநிதிகளாக விளங்குதல் பின்னிரண்டடியிற் காண்க.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

8. முச்சங்கம் திகழ்ந்ததமி ழகத்தே வந்து
முன்னுள்தொட் டிலகுபல முடிசார் மன்னர்
மெச்சுபெரு வள்ளன்மரர் புலவோர் வீரர்
வியன்வாலாற் றியல்துருவிப் பல்லோர் இந்நாள்
இச்சையுடன் செயும்சரித நூலா ராய்ச்சி
இன்னவெலாம் நீயருளின் நிறைவா விட்ட
பிச்சையின்நல் விளைவன்றோ? நச்சி நாளும்
பெரியோர்தம் உச்சியிற்கொள் விச்சைவாழ்வே.

கலிவிருத்தம்.

9. வாழ்க மாமகோ பாத்தியா யர்வளம்
வாழ்க செந்தமிழ் வண்கலை நாளுமே
வாழ்க சென்னை வளர்கலா சங்கம்சீர்
வாழ்க வையகம் தக்கவர் வாழ்கவே.

வே. முத்துஸாமி ஐயன், எம்.ஏ.,எல்,டி.,
பால பாடசாலைப் பரிசோதகன்.
போளூர்

---

8. பற்பல தமிழ்நாட்டுப்பெரியார் சரித்திர ஆராய்ச்சிக்கு ஐயரவர்கள் பதிப்புநூல்களே பெரிய ஆதாரமென்பது கூறப்பட்டது.

9. ஈற்றடியில் தக்கவர் என்பது முதற்கவியின் முதற்சொல்லாகிய தக்க என்பதோடு மண்டலித்துநிற்கும்.

மகாபாரத வசனப்பதிப்பும் மதிப்புக்கவிகளும்.

நம் நாட்டில் இராமாயணம் மஹாபாரதம் என்னும் இரண்டு இதிகாசங்களும், அரிய பெரிய தர்மங்களைப்புகட்டும் சிறந்த நூல்களாக, ஆதிகாலந்தொட்டு நிலவிநிற்கின்றன என்பதை யாவரும் நன்கறிவர்.

இவற்றுள், மஹாபாரதம் ஸ்ரீவேதவியாஸபகவானால் வடமொழியில் இயற்றப்பட்ட ஓர் உத்கிருஷ்டமான கிரந்தம். இதனை 'மஹா' என்னும் அடைமொழியே தெற்றெனப் புலப்படுத்தும். இதன் அருமைபெருமைகளை உணர்ந்து, இதனைத் தமிழ்மொழியில் இனிய வசன நடையில் பதிப்பிக்கப்புகுந்து, கும்பகோணம்காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ உப. வே. மணலூர் ம. வீ. இராமாநுஜாசாரியர் அவர்கள், தாம் 1908-ஆம் ஆண்டில், காலேஜ் வேலையினின்றும் விலகி ஓய்வெடுத்துக்கொண்டதுமுதல் இதுகாறும் (சுமார் 23-வருஷங்களாக) இவ்வொரே துறையில் ஈடுபட்டுச் சலியாது உழைத்து, இவ்வரிய நற்காரியத்தை இப்போது நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இவ்வசனநூல் சஞ்சிகை ஒன்றுக்கு 200 பக்கம் கொண்ட 45 சஞ்சிகைகளிற் பூர்த்தியாயிருக்கிறது. இதில் 18 பருவங்களும் 14 பெரும் புத்தகங்களாகத் தொகுத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. இப்பாரதநூலின் பாரப்பதிப்புக்கு ரூ 135000 செலவாயிற்றென்று தெரிய வருகிறது.

இப்பதிப்புநிகழ்வினிடையே நம் தமிழ்நாட்டார்தம் இயற்கை உபேக்ஷையாலும், ஐரோப்பியப்பெரும்போர், வியாபார விளம்பனம், பொருள்முட்டுப்பாடு முதலிய இடைஞ்சல்களாலும், ஏற்பட்ட இடையூறுகள் மிகப் பல. இவற்றையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாது நமதாசிரியர்,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்."

என்னும் குமரகுருபரஸ்வாமிகள் திருவாக்கிற் கிணங்கத் தளரா ஊக்கத்துடன், இப் பெரும்பணியில் முனைந்துநின்று, இதனை இனிதுமுடித்தது தமிழுலகுக்குப் பேருபகாரமாகும்.

பாரதத்தைப் பண்டிதர்கள் ஐந்தாம்வேதம் என்பர்.

"எல்லாப் பொருளும் இதன்கண் உள; இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லை"

என்று திருவள்ளுவமாலையில், திருக்குறளைப்பற்றிக் கூறியிருப்பது, இவ் வொள்ளியநூலுக்கும் உரிமையிற் பொருந்துவதாகும். பரந்த இந்நூலினிடம் ஸ்ரீகண்ணபிரான் திருவருட்டிறமும், பஞ்சபாண்டவர் தம் சகோதரவாஞ்சையும், வீரதீரர்களின் வெற்றிப்பிரதாபமும், பற்பல அரசியற்றருமமும், உலகியற்றருமமும், பிறவும் *பரவையுள் மணிபோல பரவிப் படர்ந்து யாண்டும் காணப்பெறும்.

இங்ஙனம் அரிய நூற்பணி இயற்றிய ஆசிரியரைச் சின்னாட்கு முன்னர்ச் சென்னை ஸம்ஸ்கிருத சங்கத்தார் பாராட்டிப் 'பாஷா பாரத துரந்தரர்' என்று பட்டம் சூட்டித் தம் நன்மதிப்புக்கறிகுறியாக ஓர் உபசாரப் பத்திரமும் சித்திரவேலைப்பாடமைந்த சிமிழிற் சேர்த்தளித்தனர். அவ்வமயம் சென்னை உயர்நீதிமன்றத்து நீதிபதிகளுள் ஒருவராகிய மகா-ா-ா-ஸ்ரீ திவான்பகதூர் K. சுந்தரம் செட்டியாரவர்கள் சபைத் தலைமைவகித்துப் பாரதப்பதிப்பைப் பாராட்டிப்பேசினர்.

கும்பகோணத்தில் பிரமஸ்ரீ ப்ரொபஸர் K. சுந்தரராமையர் அவர்கள் முதலான பற்பல விற்பனர்கள் கூடிச் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜாயிருந்தவரும் பிரபல ஹைகோர்ட்டுவக்கீலுமான பிரமஸ்ரீ V. V. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் அவைத்தலைமைவகிக்க, நமது ஆசிரியர் கைங்கரியச்சிறப்பைப் பலபடப் புகழ்ந்து, 'அன்னருக்கு நம் நாட்டார் ஒரு தக்கநிதி சேர்த்துதவுவது' என்று முடிவுசெய்துள்ளார்கள். இங்ஙனம் செய்தது மிகவும் பொருத்தமே; ஏனெனில் பாரதப்பதிப்புப் பெருஞ்செலவில் ரூ 15000 வரை ஆசிரியர் கைப்பொறுப்பாக நிற்கின்றதெனத் தெரிதலின் என்க. இதனைத் தமிழ்வாணர்கள், மொழியால் முடிவுசெய்தமையோடமையாது, செயலால் சித்திக்கக் காண்பது மிகவும் அவசியமாகும். நமது ஆசிரியர் பாரதப்பதிப்பு வகையிற் பட்டுள்ள பாரக்கடனைத் தீர்ப்பது தமிழ்நாட்டார்கடன்மையே யன்றோ?

---

*பரவை - கடல்; கடல் ரத்னங்களுக்கு இருப்பிடமாதலால் ரத்னாகரம் என்றும் அதற்குப் பெயர் உண்டு.

இப்பெரியாரின் செயற்கரும் பெருஞ்செயற்சிறப்பை வாயார வாழ்த்தி, அவர்களுக்கு எல்லாவித நன்மைகளும் மேன்மேலும் ஓங்க வேண்டுமென்று, எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளை மனமாரச் சிந்தித்து, வழுத்துகின்றேன்.

இந்த எனது பாராட்டு மொழிகளை, மேற்கூறிய கும்பகோண மகா சபையில் படிப்பிக்குமாறு சில மதிப்புக்கவிகளாக அனுப்பிவைத்தேன். நம் 'செந்தமிழ்' நேயர்கள் கண்ணுறும்வண்ணம் அவற்றை இங்கே தருகின்றேன். பாரதத்தின் பெருமைகருதி இவற்றை அன்பர்கள் ஏற்றுக் கொள்வார்களாக.

மதிப்புக்கவிகள்.

நேரிசைவெண்பா.

1. மாபா ரதவசனம் வண்டமிழிற் பெய்பெருமை
ஆ! பார் இதுபே ரதிசயமென்—றேபாரோர்
தாமா தரிக்குமா தந்தான் மணலூர்வாழ்
ராமா நுஜமால் நயந்து.

2 நடையழகும் சொல்லழகும் நாளு வளஞ்சார்
தொடையழகும் அச்சுத் தொகையின்—கிடையழகும்
புத்தகத்தின் கட்டழகும் பொன்னிற்பேர் வெட்டழகும்
நத்தகமாம் யார்க்குமே நன்கு.

3. உழைத்துக் களைத்துமிக ஓய்வுகொளுங் காலத்து)
இழைத்த பெரும்பணியீ தென்னில்—தழைத்தவுளத்
திட்பமுடன் ஒட்பநுட்பம் தெய்வ அருட் பெட்பின்சீர்
கட்புலனிற் கண்டாம் கதித்து.

4. அங்கண்மா ஞாலத் தரும்பெரும்ஓர் செய்கைசெயின்
அங்குமா பாரதமஃ தாமென்பர்—இங்குமகா
பாரதமா நூன்முழுதும் பைந்தமிழில் தந்தாற்கு
நேரெதனைச் சொல்வாம் நினைந்து.

5. வாரிதிசூழ் வையத்து மா"தரும மேஜெய"மாம்
பேரிதிகா சந்தமிழிற் பேர்த்துதவும்—ஆரியனை
நேரிதென ஓர்கால் நிகழ்ந்தொரு கால்வறத்தும்
மாரிதனைக் கூறேம் மதித்து.

---

2. கிடை - அமைப்பு. நத்து அகம் - விரும்பும் மனம்.

6. பூந்து பகீரதனார் மூள்தவத்து நீள்பயனா
வந்துவண் கங்கை வயங்கலென — இந்த
மறைப்பெரியோன் நல்முயல்வால் வண்டமிழிற் கைந்தாம்
மறைப்பொலிவு வாய்த்த வளம்.

7. முதனூலோ ஆழி முழங்குதிரை கள்பல்
விதமாம் கிளைக்கதைதாம் மேவி — இதமாகும்
நீதிமணி இம்மூந் நீருண் டுமிழ்ந்தமுனி
ஒதிவ் இராமா நுஜன்.

8. அருப்புவகை பெருக்கம் அன்புபொறை ஆன்ற
பெரும்புலவன் மாகீர்த்தி பேசில் — இரும்புவனத்(து)
அன்று மகாபா ரதஞ்செய் வியாதனென
என்றும் மிளிரும் இயைந்து.

9. மாதவன்வண் மைத்திறமும் மாதர்கள் போர்த்திறமும்
போதஅறன் மைந்தன் பொறைத்திறமும் — ஆதவன்செய்
பேரொளி போலப் பிறங்கத் தமிழ்செய்தான்
சீரொளிர்க யாண்டும் செழித்து.

10. பாரதநாட் டுக்கணியாப் பல்லறமும் காட்டுமகா
பாரதநூல் வாழி பரவுபுகழ் — கூரதனை
வண்டமிழிற் பேர்த்த இராமாநுஜஆசான் பெரும்
எண்டிசையும் வாழி இனிது.

வே. முத்துஸாமி ஐயன், எம்.ஏ., எல்.டி.,
பால பாடசாலைப் பரிசோதகன்
போளூர்

---

7. முதனூலென்னும் சமுத்திரம், பல கிளைக்கதைகளாகிய அலைகளுடனும், இதோபதேசமென்னும் ரத்தினங்களுடனும் கூடியது. இதனை முன் அலைக்கடலை உண்டு மீண்டும் வெளியிட்ட அகஸ்தியரைப்போல இக்கலைக் கடலை மொழிபெயர்த்தவினர் ஆசிரியர் எனப்பட்டது.

9. போத அறன்மைந்தன் = ஞானவானான தருமபுத்திரர். ஆதவன் = சூரியன்.

1932-ஷு அக்டோபர்-மீ 28-உ (ஆங்கீரஸ-ஷு ஐப்பசி-மீ 12-உ) காலை 9-மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

---

1. மகா-ா-ா-ஸ்ரீ K. ராமையங்கார் அவர்கள், B.A., B.L.,
அக்கிராஸனம் வகித்தவர்.
2. ,, S. சோமசுந்தரபாரதி அவர்கள், M.A., B.L.
3. ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள், B.A., BL.
4. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார் அவர்கள், B.A., B L.
5. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள், B A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1932-ஷு ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களின் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. பெருந்தொகை முதற்பகுதி குறிப்புரையை முடித்து வெளிப்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று. கம்பராமாயண இன்கவித்திரட்டு விஷயமான ஆலோசனை தள்ளிவைக்கலாயிற்று.

III. சங்கக்கட்டிடத்திற்கும் தொட்டப்பநாயக்கனூர் ஜமீந்தாரவர்களின் மனைக்கும் மத்தியிலுள்ள சங்கம் காம்பவுண்டு சுவரைப் பூராவும் இடித்துவிட்டு ஷை இடத்தில் சரியான அஸ்திவாரம்போட்டுப் புதிதாகச் சுவர் கட்டவும், ஷை சுவரில் தமக்கு யாதொரு உரிமையையும் பாராட்டாது பூராபாத்தியதையையும் சங்கத்துக்கேவிட்டுவிடவும் ஷை ஜமீந்தாரவர்கள் சம்மதிப்பதாயிருந்தால், அவர்கள் கேட்டுக்கொண்டபடி சுவர்கட்டுவதற்கு அனுமதிக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

IV. சங்கம் தனித்தமிழ்ப்பரீக்ஷை சம்பந்தமாக விண்ணப்பித்துள்ள இரண்டு மாணவர்களின் விடைப்பத்திரங்கள் சோதனைக்காக இப்பொழுது இல்லாமையால் அவ்விருவர்க்கும் தவறிய பாடத்தில் மறு பரீக்ஷை நடத்தவேண்டுமெனத் தீர்மானிக்கலாயிற்று,

V. சிதம்பரம் அண்ணாமலை ஸர்வகலாசாலை செனேட்டுக்குச் சங்கத்தின் பிரதிநிதி ஒருவரைத் தெரிந்தெடுத்தல்சம்பந்தமான ஆலோசனை தள்ளிவைக்கலாயிற்று,

மதுரை,
28—10—1932.

K. ராமையங்கார்,
அக்கிராசனம் வகித்தவர்.

மதுரைத்தமிழ்ச்சங்கதது

1932-ம்வருடம் ஆகஸ்டுமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1932 ஆகஸ்டு			வரவு 1931 ஆகஸ்டு			விவரம்.	செலவு 1932 ஆகஸ்டு			செலவு 1931 ஆகஸ்டு		
I GENERAL SECTION:							I GENERAL SECTION:						
(1) மாதச்சந்தா வகையில் வரவு ...	50	...	...				(1) சங்கம் மானேஜ்மெண்டா பீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	100	...	...			
(2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ...	677	12	...				(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	127	...	...			
(3) சங்கக்காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ...	28	...	...				(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	144	...	6			
							(4) Stationery contingencies வகையிற்செலவு ...	1	11	...			
							(5) தபால், தந்தி வகையிற்செலவு	2	...	...			
மொத்தம் ரூ ...	755	12	...	1803	4	...	மொத்தம் ரூ ...	374	11	6	355	10	9

II EDITORIAL SECTION:						
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வகையில் வரவு ...	17	...	...			
(2) செந்தமிழ்ப் பத்திரிகைக்குச் சந்தா வகையில் வரவு ...	8	...	...			
(3) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	189	6	...			
(4) செந்தமிழ்ப் பழைய பிரதிகள் விற்றவகையில் வரவு...	5	8	...			
மொத்தம் ரூ ...	219	14	...	117	9	...

II EDITORIAL SECTION:						
(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	35	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி வகையிற் செலவு. ...	149	...	6			
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலி வகையிற் செலவு. ...	54	...	...			
(4) தபால், தந்திவகையிற் செலவு. ...	15	...	...			
மொத்தம் ரூ ...	253	...	6	126	5	3

III PRESS SECTION:						
(1) அச்சுக்கூலி வகையில் வரவு ...	71	4	...			
(2) ஷை அச்சுவேலைகட்காக வாங்கிய காகிதங்கட்குக் கிரையம் வரவு ...	8	7	...			
(3) பைண்டிங்கூலி வகையில் வரவு ...	42	7	...			
மொத்தம் ரூ ...	122	2	...	129	3	...

III PRESS SECTION:						
(1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	106	14	6			
(2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	9	15	...			
(3) பைண்டிங் ஆபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது	28	5	11			
(4) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு	7	14	9			
மொத்தம் ரூ ...	153	2	2	159	6	2

ஆகமொத்தம் வரவு ரூ ...	1097	12	...	2050	...	...
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ ...	16311	5	11	13687	7	8
ஆகமொத்தம் ரூ ...	17409	1	11	15737	7	8

ஆக மொத்தம் செலவு ரூ ...	780	14	2	641	6	2
மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ ...	*16628	3	9	15096	1	6
ஆகமொத்தம் ரூ ...	17409	1	11	15737	7	8

*By M. U. C. B.
Pass Book Rs. 5000– 0– 0

M. R. C. C. Bank
Pass Book Rs. 10994– 2– 2

Cash on hand Rs. 634– 1– 7

16628– 3– 9

Audited and found correct,
V. S. RAMASWAMI,
AUDITOR,
26—10—32.

LAKSHMINARAYANAN,
Manager,
MADURA TAMIL SANGAM.
5—9—1932.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1932-ம்வருஷ செப்டம்பர்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1932 செப்டம்பர்			வரவு 1931 செப்டம்பர்		
I GENERAL SECTION :						
(1) மாதச்சந்தாவகையில் வரவு...	100	...	...			
(2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ...	74	11	1			
(3) சங்கக்காலியிடத்துக்கு மாத வாடகைவரவு ...	28	...	...			
மொத்தம் ரூ ...	202	11	1	1173	11	10

விவரம்	செலவு 1932 செப்டம்பர்			செலவு 1931 செப்டம்பர்		
I GENERAL SECTION :						
(1) சங்கம்மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	100	...	...			
(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	127	...	...			
(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	138	12	4			
(4) Stationery, contingencies வகையிற் செலவு ...	1	10	...			
(5) தபால், தந்திவகையிற்செலவு	2	...	...			
(6) முனிசிபாலிடிக்கு வரி செலுத்தியது ...	73	13	11			

ஆகமொத்தம் வரவு ரூ. ...	511	14	1	1380	7	10
மாத ஆரம்பத்திலிருந்த கை யிருப்புத்தொகை ரூ. ...	16628	3	9	15096	1	6
ஆகமொத்தம் ரூ. ...	17140	1	10	16476	9	4

ஆக மொத்தம் செலவு ரூ.	850	4	2	674	5	6
மாதமுடிவில் மீதியிருப்புத் தொகை ரூ. ...	*16289	13	8	15802	3	10
ஆக மொத்தம் ரூ. ...	17140	1	10	16476	9	4

*By M. U. C. B.
Pass Bk. Rs. 5000- 0- 0
M.R.C.C. Bank
Pass Bk. Rs. 11044- 2- 2
Cash on hand Rs. 245-11- 6

16289-13- 8

Audited and found correct.

V. S. RAMASWAMI,

AUDITOR.

26—10—1932.

LAKSHMINARAYANAN,

Manager,

MADURA TAMIL SANGAM.

5—10—1932.

319 கொடியுந் துடியுங் குளிருந் தளிரும்
படியுமிசைக் காந்தளொடு பாந்தள்—அடிமையெனும்
320 மேன்மைபெறு கண்சாயல் வீதிநடை கூந்தலிசைப்
பான்மை யுதரம் பயோதரங்கள்—வான்மருங்குல்
321 மெல்லடிசெங் கைநிதம்ப மிஞ்சு சவுந்தரஞ்சேர்
வல்லி மதனகலா வல்லியாள்—தொல்லுலகில்
322 வீரப்ர தாப விசயமன்னர் கப்பமிடப்
பாரப்ர தாபம் படைத்தமன்னர்—நேரொக்க
323 வச்ரமணி மேடைதனில் வாளரிச்சிங் காதனத்தில்
இச்சையுடன் வீற்றிருக்கு மெல்லைதனில்—உச்சிதஞ்சேர்
324 அங்குறப்பெண் ணொருத்தி யானகுறி சொல்வனென்றே
அங்குறப்பெண் ணாரமுத மாயினாள்—பங்கமுறு
325 தோர்ந்தென் மனக்குறிப்பி லொன்றுளது சொல்லெனவே
தேர்ந்து மலைக்குறப்பெண் சிந்தைமகிழ்ந்—தாய்ந்துநன்றாய்
326 ஓர்வருட மோர்மாத மோர்நா ளொருவாரம்
ஆர்வமுடன் சொல்லென் றவளிசைப்பச்—சீர்பொருந்த
327 உன்னும் வருட முரைக்கும் பதினொன்றும்
என்னுமுன்னே யிச்சுரன்மே விச்சையென்றாள்—பின்னுமவள்

---

319. துடி-உடுக்கை. குளிரும்: பெயரெச்சம்.

320. சாயல்-மென்மை. வீதி-நேரோடல். இசைப் பான்மை-இசைப் பாட்டின் பகுதி. உதரம்-வயிறு. பயோதரங்கள்-கொங்கைகள். வான்-பெருமை. மருங்குல்-இடை.

318–20. கண் முதலியவற்றிற்கு அயில் முதலியவற்றை நிரனிறையாக உவமை கொள்க. இடைக்குக் கொடியும் துடியும் உவமைகள்.

322. படைத்தமன்னர்-சக்கரவர்த்திகள்.

323. அரிச்சிங்காதனம்: இருபெயரொட்டு. எல்லை-காலம். உச்சிதம்-மேன்மை.

324. அம் குறப்பெண்ணும் ஒருத்தி. அங்கு உற்

325. சொல் என-சொல் என்று தெரிவை சொல்ல.

326. நாள்-நட்சத்திரம். வாரம்-கிழமை. அவள்-குறத்தி.

327. பிரபவ முதலிய அறுபதுவருட வரிசையில் பதினொன்றாவது ஈசுவர வருடம்.

328 மாதமொரு நாலென்றாண் மன்றாடி தன்மீதிற்
காதலுற்றாற் போலுங் கருத்தென்றாள்—பேதமில்லா

329 நாளினுமோ ராறென்றா ணன்றுதிரு வாதிரையான்
தோளின்மேன் மையலென்று சொல்லினாள்—கோளிலரு

330 வார மிரண்டென்றாள் வாழ்சோம சேகரனைச்
சேர மனதிற் சிறந்ததென்றாள்—ஆரணங்கும்

331 ஆமெனது யோகத்தா லந்தக் கரணமுடன்
தாம மணிப்பரோ சாற்றென்ன—மாமயிலே

332 வந்தோர் கணப்பொழுதின் மாலை யுதவுமதிற்
சந்தேக மில்லையெனத் தானுவந்து—சிந்தைமிகு

333 பொன்னுடை மின்னுமணிப் பூணுதவு மவ்வளவில்
பன்னகப் பூணு பரணத்தான்—தன்னெடுந்தேர்

334 மங்கலங்கள் சேர்வீதி மன்னுதலு நன்னுதலும்
அங்கலங்கண் மின்னவெழுந் தாங்கணைந்தாள்—செங்கை

335 மலரைக் குவித்து வதனமலர்ந் தாண்மேல்
மலரைக் குவித்துவிட்டான் மாரன்—அலரெடுத்து

336 நல்லாருந் தூற்றினார் நாண்மடமச் சம்பயிர்ப்பாம்
எல்லாமோர் பக்கத் திருத்திவைத்துச்—சொல்லலுற்றாள்

---

328. நாலாவதுமாதம் ஆடி.

329. ஆறாவது நட்சத்திரம் திருவாதிரை, ஆதிரையான்-சிவபெருமான், கோள்-ஞாயிறு முதலியன.

330. இரண்டாவது வாரம் சோமவாரம்; "சோம சுந்தர னுரிய வார மாதலாற் சோம வாரம்" திருவிளை. 14: 7.

331. யோகத்தால்-நல்லூழால், அந்தக்கரணமுடன்-மன உவப்புடன். 326-ஆம் கண்ணிமுதலியவற்றில் வருடம் முதலியவற்றைக்கூறியதோடியைய யோகம், கரணம் என்பவையும் தொனிக்கும்படி கூறினார்.

334. அம் கலங்கள்-அழகிய ஆபரணங்கள், ஆங்கு-வீதியில்,

337 வில்லிலே வண்டன் விடுங்கணையிற் றப்பிலிபூ
வில்லிலனே யென்றாலு மெய்திடுவான்—சொல்லிலே

338 கூவென்னுஞ் சின்னமுற்றோன் கூறுமெய்யே யில்லாதோன்
காவென்றால் வந்தடிக்கக் காத்திருப்பான்—தேவரீர்

339 இவ்வே டனைவிட் டெனைவருத்தி னாலெவர்க்கும்
ஒவ்வாது நீதி யுடையாரே—எவ்வுலகும்

340 போற்ற வரசுரிமை பூண்ட சவுந்தரரே
ஆற்று மயலேனை யாளுமெனக்—கோற்றொடிதான்

341 பேசிய போது பெருமான் றிருவுளத்தில்
நேசம்வைத்தாற் போலமற்றோர் நீள்வீதிக்—கோசைமிகு

342 தூரியம் பேரி தொனிப்பவுற்றாள் பெண்மைதனிற்
பேரிளம்பெண் ணனவொரு பேரிளம்பெண்—சேரும்

பேரிளம்பெண்.

343 இருட்டறையுட் பல்கணியி னெய்துநிலாக் கூடும்
இருட்டனைநே ரூடுநகரை யெய்தும்—திருக்குழலாள்

---

337. வண்டன்-வண்டாகிய நாணையுடையவன், துட்டன். தப்பிலி-தப்புதல் இல்லாதவன், இகழ்ச்சிக்குறிப்புப்பெயர். பூவில் இல்லன்-பூவிலுள்ள மனைவியை யுடையான்; திருமால்; இல்-மனைவி. பூவில் இலனே என்றாலும் எய்திடுவான்-பூமியில் நான் இல்லாதவன் என்றாலும் அம்பால் எய்வான்; "கொள்ளும், பொருளில ராயினும் பொங்கெனப்போந் தெய்யும், அருளின் மறவர்" திணைமாலை, 84.

338. கூவென்னும் சின்னம்-குயில்; கூகூ வென்னும் குறிப்பு. மெய்-சரீரம், உண்மை. கா-சோலை, காப்பாயாக. வந்து அடிக்க-தென்றல் வீச, வருத்தலைச்செய்து கொள்ளையடிக்க.

339. வேடனை-வேள் தனை, வேடச்சாதியானை.

340. ஆற்றும்-தாங்கும்.

342. தூரியம்-வாத்தியம். பேரிளம்பெண்-பெரிய இளமையையுடைய பெண்; "காமர் கவினிய பேரிளம் பெண்டிர்" (மதுரைக்காஞ்சி, 465) என்பதையும் அதனுரையையும் பார்க்க.

343. இருட்டு அறையுள். பல்கணி-சாளரம். இருள் தனை.

344 பூணூற் றிறுகும் புணர்முலைக்குப் பூணிலதாற்
காணுறவே சாய்ந்தசையுங் காட்சியென—நாண்முதலா

345 முற்றாப் பெதும்பை முதற்பருவந் தோறும்விஞ்சை
கற்றாய்ந் தலைமையாக் கவினமைத்துச்—சொற்ற

346 தெரிவை வரைக்குந் திரட்டிவைத்துப் பார்த்துச்
சரியென்றாற் போலுந் தனத்தாள்—அரிய

347 பதுமை யனையாள் பரன்சேவை யன்றிப்
புதுமை விழிக்குப் பொருந்தாள்—மதுகரங்கள்

348 ஒலமிடும் பூங்காவி லுற்றொவ் வொருதருவாய்ச்
சாலவெதிர் கண்டுகண்டு தான்மகிழ்ந்தாள்—கோலமிகு

349 மஞ்ஞை யனையமின்னாள் வாழைதனைக் கண்டுதிருப்
பைஞ்ஞீலி யானைப் பரவினாள்—இஞ்ஞாலத்

350 துற்றார்க் குதவி யுறுபலாக் கண்டுதிருக்
குற்றால நாதனென்று கும்பிட்டாள்—சுற்றியதன்

351 வல்வேலி யாக வளர்வேணுக் கண்டுதிரு
நெல்வேலி யீசனையே நேசித்தாள்—பல்லின்

352 மருமுல்லை வாயாள் வளர்முல்லை கண்டு
திருமுல்லை வாயில்சிந் தித்தாள்—ஒருமாச்

---

344. பூண்-ஆபரணம், தண்டுக்குக் கட்டப்படும் பூண். பேரிளம்பெண் செயற்கை அழகை விடுத்தவளாதலின் அதற்கேற்ப அவ்வியல்பு கூறப்படும்.

346. சரி:உடன்பாட்டுக்குறிப்பு; சரிவாயாக என்பது மற்றொருபொருள்.

347. புதுமை-புதிய காட்சி, புதிய அஞ்சனம். மதுகரங்கள்-வண்டுகள்.

348. தரு-மரங்கள்.

349. வாழை திருப்பைஞ்ஞீலித் தலவிருட்சம். பின்னர்க் கூறிய மரங்களை அவ்வத் தலவிருட்சமாகக் கொள்க.

350-51. அதன் வல் வேலியாக-அந்தப் பலாவின் வலிய வேலியாக; வேணு-மூங்கில்; "வேரல் வேலி வேர்க்கோட் பலவின், சார னாட" குறுந்தொகை, 18.

352. முல்லை வாயாள்-முல்லையரும்புபோன்ற பற்களையுடைய வாயுடையாள். முல்லை-முல்லைக்கொடி. முல்லைவாயில்-வடதிருமுல்லைவாயில், தென்றிருமுல்லைவாயிலென்னும் தலங்கள். மா-மாமரம்.

353 செறிவுற் றிடலுஞ் சிவனை முலையாற்
குறியிட் டவளைக் குறித்தாள்—முறியாரும்
354 நிம்பமெதிர் கண்டா ணிமல னிராசலிங்கச்
சம்புவைமுன் கண்டதென்னத் தான்மகிழ்ந்தாள்—உம்பரிசை
355 திந்திருணி கண்டா டிருவீங்கோய் மாமலையில்
எந்தைதனைச் சிந்தைதனி லேத்தினாள்—கந்தநிறை
356 வில்வமெதிர் கண்டாள் விரைந்துசொக்க நாயகிசேர்
சொல்வாலி நாதனெனச் சூழ்ந்திறைஞ்சிப்—பல்லுயிர்க்கும்
357 தன்னடியி னீழ றருவாற்குத் தான்மேலாய்த்
தன்னடியி னீழ றருங்கடம்பை—முன்னுறக்கண்
358 டன்பிற் குழைந்தாங் கடிபணிந்து கைகூப்பி
இன்பமுட னெண்ணுவா ளிக்கடம்பின்—நம்பரமர்
359 கூடலாய் வந்திருந்து கொண்டக்கா லிவ்விடையே
கூடலா மென்று குறித்திடுமுன்—நீடும்
360 கலையா னிடையிங் கலையான் மலைய
மலையான் கயிலை மலையான்—இலகியவேள்
361 ளேற்றினா னின்பமன்பர்க் கேற்றினா னென்றுயரை
ஆற்றினான் காவிரிப்பே ராற்றினான்—சாற்றுமறைக்
362 காட்டினான் போற்றுநெறி காட்டினான் றன்னுரையை
நாட்டினான் சோழவள நாட்டினான்—ஈட்டும்

---

353. குறியிட்டவள்-அம்பிகை. முறி-தளிர்.

354. நிம்பம்-வேப்பமரம். இராசலிங்கச்சம்பு-இரத்தினகிரீசர்; வாட்போக்கிநாதர்.

355. திந்திருணி-புளியமரம்.

349-57. தலவிருட்சங்களைப் பாராட்டிய முறை, திருவானைக்கா உலாப் பேரிளம்பெண்பருவத்திலும், சொக்கநாதருலா அரிவைப்பருவத்திலும் காணப்படுகின்றது.

359. கூடல்-மதுரை, மணத்தல்; சிலேடை. இவ்விடையே-இவ்விடத்திலேயே.

360. கலையான்-மானையுடையவன். மலை அமலையான்.

இதுமுதல் தசாங்கம் கூறப்படும்.

361-2. மறைக்காடு-வேதாரணியம்.

363 துதியா னுதாத் துதியா னிடத்தம்
பதியான் கடம்பைப் பதியான்—சதுர்வேதன்
364 ஆரணியன் மெய்யனடி யாரணியன் மாவிரதம்
தாரணியன் பொன்னிதழித் தாரணியன்—ஓர்கை
365 உரியான் பணிவோர்க் குரியானெண் ணுரைப்
பரியானல் வேதப் பரியான்—மருவுசெங்கை
366 வாரணத்தன் கோட்டுவெள்ளை வாரணத்தன் வாணிமரு
வாரணத்தன் போற்றுமயி ராவணத்தன்—பாரப்
367 படியேர் பொருந்தும் படியே செயும்பூங்
கொடியே புணருங் கொடியான்—நெடிது
368 வழங்கும் புவனத்து மன்னுயிர்க்குந் தானுய்
முழங்குமோங் கார முரசான்—எழுங்கதிசேர்
369 சந்திரனுஞ் சூரியனுந் தானவரும் வானவரும்
இந்த்ராதி திக்குக் கிறையவரும்—ஐந்துபெரும்
370 பூதமும் பூதப் புணர்ப்பும் புகன்றசதுர்
வேதமும் வேத விதிவிலக்கும்—போதனல்

---

363. உதாத்து உதியான். இடத் தம்பதியான்-இடப்பாகத்திலே மனைவி யையுடையான்; தம்பதி-மனைவி; வழக்கு.

364. ஆரணியன்-பார்வதியையுடையவன். மெய்யன்-உண்மைப்பொருளாக உள்ளவன். அடியார் அணியன்-அன்பர்களுக்கு அருகிலுள்ளவன். மா இரதம் தாரணியன்-பூமியைப் பெரிய இரதமாக உடையவன்; தாரணி-பூமி. இதழித் தார் அணியன்-கொன்றைமாலையை அணிந்தவன். ஓர்கை-ஒருகையை யுடைய யானை; அறுகாலென்றதுபோல நின்றது.

365. பரியான்-தாங்கான்.

365–6. செங்கை வாரணத்தன்-செங்கையிற் சங்கையுடையவர்; திருமால். கோடு-நாலுகொம்புடைய. வெள்ளைவாரணத்தன்-வெள்ளையானையையுடைய இந்திரன். வாணி-கலைமகளை; ஆரணத்தன்-பிரமன். அயிராவணம்-இரண்டாயிரங்கொம்பையுடைய யானை; "அயிராவணமேறாதானேறேறி" திருநா. தே.

367. படி-பூமிதேவி. கொடி-திருமகள். கொடியான்-துவசத்தையுடையவன்; "பொறிக்கொடி மார்பிற்கொண் மரைக்கட்கொடி" திருவிடைமருதூருலா, 143.

370. பூதப்புணர்ப்பு-பௌதிகம். போதன்-பிரமன்.

371 தானே யமைத்த சராசரமு முற்பவத்தில்
ஆன நிலைபெயரா வாணையான்—மோன

372 முனிக்கணங்கள் சூழ்கருணை மூர்த்திரால் வேதத்
தனிப்பொருளெல் லார்க்குந் தலைவன்—குனிப்புடையோன்

373 வந்தா னெனவே மணிச்சின்னந் தானிசைப்பத்
தந்தா ரிடையாளுந் தான்சென்று—முந்திப்

374 பணிந்தா ளெழுந்து பகருமதன் போர்க்குத்
துணிந்தா ளடுத்துநின்று சொல்வாள்—அணிபரநம்

375 மெய்யா நிலத்தினிற்கா வேரியம்பு பாய்ச்சியுழு
தையமுறு தேபுளக மங்குரிப்பத்—துப்பதாம்

376 காமப் பயிரிலையாக் காட்சிக் கதிர்தோன்ற
ஏமமுற நெல்வேலி யீசரே—சேமித்து

377 மோக விளைவு முதிரவே ளாண்மைசெய்தால்
போக முமக்கே பொருந்துமே—மாகநுணைச்

378 சுந்தரரே யென்னமற்றத் தோகையர்பல் லாண்டிசைப்ப
அந்தரத்தோர் பாதலத்தோ ரம்புவியோர்—செந்தமிழோர்

379 தேனே கனியே செழும்பாகே தெள்ளமுதே
ஊனே யுடலி னுயிர்க்குயிரே—கோனேயெம்

380 உள்ளமே யுள்ளத்தி னுள்ளுணர்வே பேரின்ப
வெள்ளமே வெள்ளை விடைப்பாகா—தெள்ளுதமிழ்ச்

---

372. குனிப்பு-நடனம்.

373. தந்து ஆர்-நூலையொத்த.

375. மெய்யாம் நிலத்தினில்-தேகமாகிய நிலத்தில். காவேரியம்பு-சோலையிலுள்ள தேனிறைந்த மலர்ப்பாணம், காவிரிநீர். புளகம்-மயிர்சிலிர்த்தல். அங்குரிப்ப-முளைப்ப.

376-7. காட்சி-தோற்றம். மோகத்தை விளைவாகக்கூறுதற்கேற்ப நெல்வேலியீசர் கூறப்பட்டார். வேளாண்மை-மன்மதனது ஆண்மை, பயிர்த்தொழில். போகம்-இன்பம், விளைவு.

378. என்ன-என்று பேரிசைம்பெண் சொல்ல.

380. "உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற, கருவே" தே.

381 சொல்லே பொருளே துதிசே ரிருநிதியே
எல்லே யஞ்ஞான விருளகற்றும்—வல்லானே

382 என்றென்று பன்முறைநின் றேத்த வருளிமதி
ஒன்றொன்று செஞ்சடையா னோர்காலும்—குன்றாத

383 சீருடையான் செல்வச் சிறப்புடையான் றென்கடம்பை
ஊருடையான் போந்தா னுலா.

கடம்பர்கோயில் உலா முற்றுப்பெற்றது.

விருத்தம்.

*விருப்பிருக்கு மனதடியார் செய்பணிக்கிங் கிடையூறு விளைக்கும் பாவ
இருப்பிருக்கு மூடர்தம திருப்புமன முருக்கிவிடற் கியல்பாய்ச் செங்கை
நெருப்பிருக்கப் படவரவத் தருத்தியுமங் கிருப்பதென்ன நினையா தென்னே
திருப்பிருக்கு மூவிலைவேற் படையுடைய கடம்பவனத் தேவர் தேவே.

330-81. தமிழ்ச்சொல்லே பொருளே: "சொல்லானைப் பொருளானை", "சொல்லுகின் பொருளு மாவர்" (திருநா. தே.) எல்லே-ஒளியே.

382. மதி ஒன்று ஒன்று-ஒரு பிறை பொருந்திய.

*இந்த விருத்தம், ஏட்டுப்பிரதியில் இந்த உலாவின்பின் எழுதப்பட்டிருந்தது.

உ

கணபதிதுணை.

கடம்பர்கோயில் உலா.

இது

மஹாமஹோபாத்யாய - தாக்ஷிணாத்யகலாநிதி

Dr. உ. வே. சாமிநாதையரவர்களால்

பரிசோதித்துத்

தாம் நூதனமாக எழுதிய குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

செந்தமிழ்ப்பிரசுரம் — ருக.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

1932.

விலை அணா 6.

உ

கணபதி துணை.

முகவுரை.

திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரியந்தமி ழோடிசை யானவன்
கூரியகுணத் தார்குறி நின்றவன்
காரிகையுடை யான்கடம் பந்துறைச்
சீரியல்பத்தர் சென்றடை மின்களே.

தேவாரவைப்பு.

(“காவிரிசூழ் கடம்பந்துறை யுறைவார் காப்புக்களே.”

“கடைமுடிகானூர் கடம்பந்துறை
கயிலாய நாதனையே காணலாமே.”

“மயிலாடுதுறை கடம்பந்துறை யாவடுதுறை
மற்றுந்துறையனைத்தும் வணங்குவோமே”—திருநா.

“பாங்கூ ரெங்கள் பிரானுறையுங் கடம்பந்துறை”—சுந்தர.)

காடவர்கோன் திருவெண்பா.

அழுகு திரிகுரம்பை யாங்கதுவிட் டாவி
ஒழுகும் பொழுதறிய வொண்ணா—கழுகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் றென்பாற்
குழித்தண் டலையானைக் கூறு.

திருச்சிற்றம்பலம்.

உலாவென்னும் தமிழ்ப்பிரபந்தம் பாட்டுடைத்தலைவனது பவனியைச்சிறப்பித்துப் பாடப்படுதலால் இப்பெயர்பெற்றது; உலா—பவனி. தலைவன் வீதியிற் பவனிவருகையில் அவ்வீதியின்கணுள்ள பேதைமுதற் பேரிளம்பெண் ஈறாகிய ஏழுபருவமகளிரும் அவனைக்கண்டு காதல்கூர்ந்ததாகக் கலிவெண்பாவாற் பாடப்படுவது இது. இதன்கண் பாட்டுடைத்தலைவனது பலவகைப்பெருமைகள், ஏழுபருவமகளிர்களின் இயல்பு, அவர்களடைந்த மெய்ப்பாட்டுவகைகள் முதலியன காணப்படும்,

தத்தம் புலமைத்திறத்திற்கேற்பக் கருத்துக்களைத் தொடர்புபெற அமைத்து விரித்துத் தாம் வழிபடுதெய்வங்கள்மீதும், தம் ஆசிரியர் மீதும், தம்மை ஆதரித்த உபகாரிகள்மீதும் பலபுலவர்கள் உலாக்களைப் பாடியிருக்கின்றனர்.

சேரமான்பெருமாணயனாரால் இயற்றப்பட்ட ஆதியுலாவும், தத்துவராயரால் இயற்றப்பெற்ற ஞானவினோதன்உலாவும், கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரால் இயற்றப்பெற்ற மூவருலாவும் ஆகிய பழையநூல்கள் முறையே இம்மூன்று வகைக்கும் உதாரணங்களாக உள்ளவை.

தலங்களிலுள்ள மூர்த்திகளைத் தலைவராகக்கொண்டு பாடப்பட்ட தமிழ்ப்பிரபந்தங்கள் பிற்காலத்து மலிந்தன. அவ்வகையில் உலாக்களும் இயற்றப்பட்டன. "நன்னெடு வீதியின், மதகளிறூர்தன் முதனிலை யாகும்" (பன்னிருபாட்டியல், சூ. 216) என்ற சூத்திரத்தோடு இயையப் பாட்டுடைத்தலைவர்களாகிய அரசர்கள் களிற்றின்மீது பவனிவந்தனரென மூவருலாவிற் காணப்படுகின்றது. ஆதியுலாவிற் சிவபெருமான் இடபவாகனத்தின்மீது எழுந்தருளியதாகச் சொல்லப்பட்டுள்ளது. தலசம்பந்தமாகப் பிற்காலத்து இயற்றப்பெற்ற உலாக்களில் அவ்வத்தலத்திலுள்ள நாயகர் (ஸோமாஸ்கந்தர்) திருத்தேரில் எழுந்தருளியதாக அமைக்கப்பட்டுள்ளது. சோக்கநாதருலாவில்மட்டும் தேர் முதலிய எழுவாகனங்களிற் சொக்கநாதர் எழுநாள் உலாப்போந்ததாகக் காணப்படுகின்றது.

*தலசம்பந்தமான உலாக்கள் அவ்வத்தலத்துக்குரிய கணிகையர்களால், தொன்றுதொட்டுப் பாடப்பெற்றுவந்தன. உலாக்களிற்கூறப்படும்†எழுபருவமகளிரும் பொதுமகளிராதலின் இப்பிரபந்தம் அவர்களோடு தொடர்புடையதாயிற்று.

மகளிர்க்குரிய எழுபருவங்களின் இயல்புகள் ஒவ்வோருலாவிலும் வருணிக்கப்படுமேனும் ஒவ்வொன்றும் தனித்தனியான சிறப்புக்களோடு விளங்கும். பெருங்கதையில் நீராட்டரவம் என்னும் பகுதியில் இவ்வெழுபருவ மகளிருடைய இயல்புகள் கூறப்பட்டுள்ளன, திற்க.

*இப்பொழுது இந்த வழக்கம் பலதலங்களில் அருகிவிட்டது.

†சோக்கநாதருலா, முகவுரையைப் பார்க்க,

தலவரலாறு.

கடம்பர்கோயிலுலாவென்பது சோழநாட்டிற் காவிரியின் தென்கரையிலுள்ளதும் தேவாரம் முதலியவற்றைப் பெற்றதுமாகிய கடம்பர் கோயிலென்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்றது. இதனை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்பது தெரியவில்லை. ஆனாலும் திருத்தேரை, "திருவாவடுதுறையி லெம்பிரா னன்ப ரிதயமோ" (கண்ணி, 84) என்பதனால் அவர் திருவாவடுதுறையாதீனத்து அடியவராகிய ஒரு பெரியவரென்று கருதப்படுகிறார்.

இத்தலத்து மூர்த்தி கடம்பவனநாதர், சுந்தரேசர், ஸௌந்தரரென வழங்கப்பெறுவர்.

அம்பிகையின் திருநாமம் முற்றுமுலையம்மையென்பது (29, 57, 74, 179); இது வடமொழியில் பாலகுசாம்பிகை என வழங்கும்.

தலவிருட்சம்:கடம்பமரம், 13, 25, 41.

தீர்த்தம்: காவிரியாறு; 16, 34, 46, 58, 361. பிரமதீர்த்தமென்ற ஒருதீர்த்தமும் உண்டு; கோவையாரில், "தண்கடம் பைத்தடம் போற் கடுங் கானகந் தண்ணெனவே" (220) என்று சொல்லப்படும் கடம்பைத் தடம் இதுவாக இருத்தல்கூடுமென்று தோற்றுகிறது.

இத்தலம் கடம்பை, கடம்பந்துறை, கடம்பவனம், தட்சிணகாசி, குழித்தண்டலையெனவும் வழங்கும். பிரமதேவர் வழிபட்டுத் திருக்கோயில் முதலியன அமைத்துத் திருத்தேர்விழாவும் நடத்தினமையாற் பிரமபுரமென்றும் (19), சோமகாசுரனிடத்திலிருந்து திருமால் வேதங்களை மீட்டற்குக்காரணமாகிய திருவருளைப்பெற்ற இடமாதலிற் சதுர்வேதபுரியென்றும் (33–6), முருகவேள் பூசித்துப் பேறுபெற்றமையிற் கந்தபுரமென்றும் (37) இது பெயர்பெறும். இத்தலத்திற் சத்தகன்னியர் பூசித்து, தம்மைப்பற்றி வருத்திய பிரமகத்தியினின்றும் நீங்கினர் (21–6); வேதசன்மாவென்னும் ஓரந்தணர் தவம்புரிந்து மதுரையில் நிகழ்ந்த திருமணக்கோலத்தை இங்கே தரிசித்தனர் (27–31); அகத்திய முனிவர் பூசித்துப் பேறுபெற்றனர்; 32.

இத்தலத்துத் திருக்கோயிலில், பிரமதேவர், சித்தமாதர்கள், அகத்தியமுனிவர் முதலியவர்களுடைய திருவுருவங்கள் தனித்தனியே உள்ளன. *இப்பொழுது கடம்பர்கோயிலைச்சார்ந்ததும், குழித்தலை என வழங்குவதுமாகிய ஊரின்கண் உள்ள ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியின் திருநாமம் ஸ்ரீசுந்தரேசுவரரென்பது. அம்பிகையின் திருநாமம் ஸ்ரீமீனாட்சியென்பது. இவற்றை நோக்கும்பொழுது கடம்பர்கோயிலிற் சிவபெருமான் திருமணக்கோலம் காட்டியதன் அறிகுறியாக இவ்வாலயம் பண்டைக்காலத்தில் அமைக்கப்பெற்றதென்று கருதப்படுகின்றது.

இத்தலத்திற்குத் திருநாவுக்கரசுநாயனார் அருளிய தேவாரப் பதிகம் ஒன்றும், ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய திருவெண்பா ஒன்றும், ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழும் உண்டு.

120-ஆம் கண்ணியால் காளத்தியென்பவரால் இயற்றப்பெற்ற அந்தாதி ஒன்று உண்டென்று தெரிகின்றது. மதுரைத் திருப்பணி மாலையால், பாகையென்னும் ஊரிலிருந்த காளத்தியப்பமுதலியாரென்பவர் ஒருவர் மதுரையிற் சில திருப்பணிகள்செய்தாரென்று புலப்படுகின்றது. அவர் இவ்வந்தாதி செய்தவராகக் கருதப்படுகிறார்.

இவையன்றி வடமொழியில் ஒருபுராணம் உண்டு. திருவாரூர் ஸ்ரீ முத்துஸாமிதீக்ஷிதரென்னும் சங்கீதவித்வானால் கேதார கௌளாகத்தில் இயற்றப்பெற்ற மிகச்செவ்விதாகிய, “நீலகண்டம் பஜே” என்னும் வடமொழிக்கீர்த்தனம் ஒன்றும் இத்தலத்திற்கு உண்டு.

“சேர்தொண்டை மண்டலத்தோர் செய்தபெரும் புண்ணியமோ, ஈதென்னும் பொற்றடந்தேர்” (85) என்னுங் கண்ணியால் இத்தலத்தில் அக்காலத்தில் இருந்த சிவபக்திச்செல்வர்களாகிய தொண்டைமண்டல வேளாளர்களால் திருத்தேர் இயற்றப்பெற்றதென்பதும், 86–7–ஆம் கண்ணிகளால் பாகையென்னும் ஊரிலிருந்த சரவணையென்னும் ஒரு செல்வர் இத்தலத்துச் சிவபெருமானுக்குத் திருவாபரணங்கள் செய்து சாத்தினரென்பதும் தெரியவருகின்றன.

*இச்செய்தியையும் வேறுசிலவற்றையும் எனக்குத்தெரிவித்தவர், குளித்தலை போர்டுஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதர் ப்ரம்மஸ்ரீ அருணாசலசாஸ்திரிகள்.

பாகையென்பது தொண்டைநாட்டில் திருக்கூவமென்னுந்தலத்துக்கு அருகிலுள்ள பாகசாலையென்னும் ஊர். அவ்வூரினராகிய சரவணமுதலியாரென்பவர் இற்றைக்குச் சற்றேறக்குறைய 200-வருடங்களுக்குமுன்பு திரிசிராப்பள்ளி நவாபினிடம் மந்திரியாக இருந்தவர். அவர் இத்தலத்தில் இருந்த திருவாவடுதுறை ஆதீனத்து மடத்தில் மடபதியாக இருந்தவர்பால் நேசம் உடையவராக இருந்தார். அவ்விருவர்களும் சேர்ந்து கடம்பந்துறைக்கோயிலைப் புதுப்பித்துத் திருத்தேர், திருவாபரணம் முதலியவை செய்துவைத்திருக்கிறார்கள். மதுரைக்கோயிலிலும், அக்காலத்திலிருந்த மாணிக்கவாசக தம்பிரானென்பவர் மூலமாக இவர் சில கட்டளைகளை நடத்திவந்தார். கலியப்தம், 4790-இல் பல ஜமீன்தார்கள் இவரது சிவபக்திமுதலியவற்றை உணர்ந்து இவருக்குப் பலகிராமங்களைச் செப்புச்சாஸனம் மூலமாக அளித்திருக்கிறார்கள். இவருடைய உருவம் கடம்பந்துறைக்கோயில் தூணில் அமைக்கப்பட்டுள்ளது. கலி. 4890-இல் இவரது பௌத்திரராகிய சரவணமுதலியாரென்பவர்காலத்தும் சில நிலங்கள் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்று தெரியவருகின்றது.

நூலாராய்ச்சி.

ஏழுபருவமாதர்களுடைய இயல்புகளும் விளையாட்டுக்களும் மரபு வழுவாமல் இந்நூலிற் கூறப்படுகின்றன.

பேதை.

ஆசிரியர் பேதையை வருணிக்கையில் மன்மதன் விற்குணத்தைக் கண்டறியா மெல்லரும்பு, தான்உரைக்கும் சொற்குணத்தை ஓராச் சுகப்பிள்ளை யென்று உருவகம் செய்கின்றார். இந்நடைத்தொடர்பமைய, "பொற்கை, உழையார் கடம்பலர்மட் டுண்டறியா வண்டு" (144-5) என்கின்றார். "கம்ப ருறையுங் கடவுளிளஞ் சூதத்தின், கொம்பி லுறையாக் குயிற்பிள்ளை" (ஏகாம்பரநாதருலா), "என்றுமனக் கன்று சிமயத் தராதரத்து, மன்னுத சஞ்சீ வனக்கன்று" (திருவானைக்காவுலா) "மைதிகழு நீலகண்டன் வாழ்கின்ற புட்பவன, மெய்தி விளை யாடா விளஞ்சுரும்பு" (திருப்பூவணநாதருலா) எனப் பிறரும் இங்ஙனமே கூறுதல் காண்க. பின்னும் இவர், "நீணிலத்து மன்னுங் கலைபொருந்தா மான்கன்று", "நீர் பின்னஞ் செபவறியாப் பிள்ளையன்னம்" எனச் சிலேடைநயம்பட

உருவகம்செய்கின்றார். அவளுடைய முடிக்கப்படாத கூந்தலுக்கு எழுவாய்பயனிலையின்றி முடிக்கப்படாமலிருக்கும் புன்கவிஞருடைய செய்யுளை உவமிக்கின்றார். அவளுடைய இனிய மழலைமொழிக்கு உவமையாகத் தொண்டர்கள் பக்திபரவசர்களாகி இறைவன்முன் நாத் தழுதழுத்துக்கூறும் துதியைச் சொல்லுதல் அறிந்து மகிழ்தற் குரியது. அவள் பாவையொடுபயிலல் சிற்றிலியற்றிச் சிறுசோறட்டு விளையாடல் முதலிய பேதைப்பருவத்திற்குரிய செயல்களை மரபுவழுவா மல் அமைக்கின்றார். சிறுசோற்றை, "அரனூர்க் கிட்டமுறும், அன்ப ருலகத் தருந்தா தருந்திடுசிற், றின்பமென" அவளுண்டாளென்பதனால், அன்பர்களுடைய இயல்பைப் புலப்படுத்துகின்றார். அவள் கடம்பவன நாதனைக்கண்டு இவர் யாரென்று செவிலியரைக்கேட்ப அவர்கள் விடை கூறும்பகுதியில் அவள்பருவத்துக்கேற்ப, "அண்டங்களைச் சிற்றிலாகச் சமைத்து விளையாடும் பாலன்" என்னும் பொருள்தோன்றக்கூறிப்பின் பலமுறை பாலனென்னும் பெயர் தொனிக்குமாறு இறைவனுடைய தன்மைகளை அவர்கள் எடுத்துச் சொல்லுவதாக அமைத்திருக்கின்றார்.

பெதும்பை.

பெதும்பை, அன்பு அரும்பினும் அது முற்றாப்பருவத்தினள். இப்பருவம் புனைவதற்கரியதென்பதை, "பேசு முலாவிற் பெதும்பைபுலி" என்னும் செய்யுட்பகுதியால் அறியலாம். இப்பருவத்தினளை, "பேதை குணம் பாதிமங்கைப் பெண்குணத்திற் பாதிகலந், தோது பருவ முறு பெதும்பை" (172) எனத் தகுதிபெற இவ்வாசிரியர் கூறியிருப்பது பாராட்டத்தக்கது. இங்ஙனம் வேறு யாரும் கூறியதாகத் தெரிய வில்லை. காதலென்னும் வித்து முளைத்து நெஞ்சைக் கொழு கொம்பாகக்கொண்டு வளருந் தன்மையினளென அவளியல்பைப் புலப் படுத்துகின்றார். அவளது முடிக்கப்பட்டகூந்தலுக்குத் தவங்கள் பல செய்தும் முடிவுபெறாமல் ஈசனருளெய்துங்காலத்திலே நிறை வேறி முடியுஞ்செயலை உவமையாக்குகின்றார். அவள் நீலம், முத்து, பச்சை, மாணிக்கம், கோமேதகம், வைரம், பவளமென்னும் ஏழுவகை மணிகளாலாகிய ஏழு கழங்குகளை எடுத்து ஆடத்தொடங்கியதாக ஒரு செய்தியை அமைக்கின்றார். இப்பகுதியில் அவ் வேழு கழங்கிற்கும் சிவபெருமானோடு தொடர்புடைய பொருள்களையே உவமைகூறுகின்றார்.

பெதும்பைப்பருவப்பெண்கள் ஏழுகற்களையேனும் ஏழுகழற்சிக்காய்களையேனும் ஒருவகைப் பாட்டுப்பாடி ஆடுதல் தமிழ்நாட்டுவழக்கு. அப்பாட்டில் ஒன்றுமுதல் ஏழு எண்வரையுள்ள பொருள்கள் முறையே கூறப்படும். இம்முறையைப் பின்பற்றி இங்கே ஆசிரியர் ஒன்றுமுதல் ஏழுவரையிலுள்ள எண்கள் அமையத் தலப்பெயரையேனும் தலங்களின் செய்திகளையேனும் எடுத்துக்காட்டுகின்றார். அவ்வகையில் ஒன்றுக்கு ஏகாம்பரமும், இரண்டுக்கு இருவர்தேடும் மலையும், மூன்றுக்குத் திரிசிராப்பள்ளியும், நான்குக்கு நான்மாடக்கூடலும், ஐந்துக்குப் பஞ்சநதியும், ஆறுக்கு ஆறுபெண்கள் அட்டமாசித்திபெற்ற பட்டமங்கையும், ஏழுக்கு ஏழுலகத்தலங்களும் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு ஏழுகழங்குகளுக்குரிய பாடற்பொருளாகத் தலச்செய்திகள் அமைக்கப்பெற்றிருத்தலைத் திருவானைக்காவுலா, ஏகாம்பரநாதருலா, திருக்காளத்திநாதருலா, இரத்தினகிரி (வாட்போக்கி) யுலா, திருவேங்கடவுலா என்பவற்றிற் காணலாம்.

பெதும்பை, கடம்பவனநாதரைத் தரிசித்ததை, “மாலளந்து காணா மலையை யிருவிழிக்கோ லாலளந்தாள்” என்கின்றார். அவள் நிலையைக் கண்ட தாய்மார், “தன்னை யறியும் தருணம்வந்த தாற்றலைவன், றன்னை மனக்குறிப்பிற் றானறிந்தாள்” என்று கூறுகின்றனர். இதன்கண், பெதும்பை மங்கைப்பருவத்தன்மைவாய்ந்தனளென்பது குறிப்பிக்கப்படுகின்றது; “நன்றறிவார் சொன்ன நலந்தோற்று நாண்டோற்று, நின்றறிவு தோற்று நிறைதோற்று-நன்றாகக், கைவண்டும் கண்வண்டு மோடக் குலையோட, நெய்விண்ட பூங்குழலா ணின்றெழுந்தாள்” (பெதும்பை) என ஆதியுலாவும், “மல்கு மூவகைக் கலுழி வரவரப், பில்கு......,கொங்கைப் புதுவரவும் தோளும் குறைநிரம்ப, மங்கைப் பருவத்தே வாங்கினாள்” (பெதும்பை) என இராசராசசோழனுலாவும், “உருவமிகப் பாரித் தொளிபடைத்து மற்றைப், பருவ மெனப்புளகம் பாரித்-தொருவாத, பேரழகு நந்தம் பெருமாட்டிக் கெய்தியது” எனச் சொக்கநாதருலாவும் கூறுகின்றன. பெதும்பையின் நிலைகண்ட செவிலியர் இறைவனைநோக்கி, “மேற்பசப்புக், காட்டுமோன் காட்டியிசைக் கானமறி யாதவெங்கள், வீட்டுமான் கைக்கொளவோ வீதிவந்தீர்” என்று கூறும் சொற்களில் சிலேடையும், மானைக்காட்டி மானைப்பிடிப்பதென்னும் வழக்கமும் அமைந்துள்ளன.

மங்கை.

மங்கைப்பருவத்தினளை, "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்" என்றாற்போலவே, "பேதை யரும்பிப் பெதும்பை யந்தப் போதாகி, மாது மலர்ந்த வனப்பினாள்" என்கின்றார். இக்கருத்து முற்பருவத்துநிலைமையையும் இப்பருவநிலைமையையும் புலப்படுத்துகின்றது. 'நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் மந்திரிமார்கள் சூழ நகிலாகிய மகுடத்தைச் சூட்டிப் பெண்கள் மன்மதனுக்குரிய மந்திரங்களையுரைக்க மனமாகிய சிங்காதனத்திலேற்றிச் சிவபெருமானுடைய புகழாகிய அபிஷேகத்தைச் செய்து மூர்த்திகரமுண்டாக்கி மோகமாகிய அரசனுக்குப் பட்டங்கவித்தாள்' என்பதில் அவளது காதல் முற்றிய தன்மையை விளக்குகின்றார். அவள் சிவபெருமான்புகழைப் பாடி அம்மானையாடினாளென்பதை, "அம்மானை யாடிவந்த வம்மானைப் பாடியே, யம்மானை யாடு மளவிலே" என்று சொற்பின்வருநிலையணிபடச்சொல்லுகின்றார். திருவானைக்காவுலாவில் அரிவைப்பருவத்தில் அம்மானை கூறப்படுகின்றது. திருக்காளத்திநாதருலாவில் மங்கைப்பருவத்தில், "தன்னைமறந் தாட்டுத் தலைபடைத்த வம்மானை, அன்னைதனை யீன்ற மலை யம்மானை—முன்னைநாட், கொங்கையொரு மூன்றுடைய கொம்பை யரு ளம்மானை, யங்கையிலே வீற்றிருக்கு மம்மானைக்—கங்கையெனும், அம்மானைப் பெற்றசடை யம்மானைப் பாடியவ, ளம்மானை யாடு மளவிலே" என வருவதும், இரத்தினகிரியுலாவில் மங்கைப்பருவத்திலும் திருப்பூவணநாதருலாவில் மங்கைப்பருவத்திலும் அம்மானைகூறப்படும் பகுதிகளும் இதனோடு ஒப்புமை உடையன.

மடந்தை.

மடந்தைப்பருவத்திற் பின்னுள்ளசெய்தி கூறப்படுகின்றது: மடந்தைப்பருவப்பெண் தன் பாங்கி ஒருத்தியை விளித்து, "ஓர் ஓவியனை அழைத்துவந்து கடம்பவனநாதர் திருவுருவத்தை எழுதும்படி கூறுவாயாக" என்றாள். அதற்குப் பாங்கி, "அப்பெருமானை யாரெழுதவல்லார்? அவரது திருமுடியை எழுதினாலும் அதிலே கங்கையை எவ்வாறு அமைத்தல்கூடும்? திருநெற்றியை வரைந்தாலும் அதிலுள்ள அக்கினிக்கண்ணை எங்ஙனம் எழுதுவான்? மற்ற இரண்டு கண்களைத் தீட்டினாலும் அவற்றில் அருட்பார்வையை எப்படிப்

பொருத்தமுடியும்? திருச்செவியில் தோடுகளை எழுதினாலும் அத்தோட்டு வடிவமாகவுள்ள கம்பளாசுவதரர்களென்னும் இசைவல்லார்களின் பாடலைப் புலப்படுத்தமுடியுமோ? திருக்கழுத்தை எழுதினாலும் அது வேதத்தை முழங்கும்படி செய்ய முடியுமோ? திருக்கரங்களை எழுதினாலும் அவை உன்னைத் தழுவிக்கொள்ளும்படி செய்வானோ? திருவடிகளை எழுதினாலும் கால்மாறிபாடலைக் காட்டமுடியுமோ? அவனை அறிஞர்களே அறிவார்கள். இப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்தன் – ஒப்புடையன், ஆமென் றெழுதவல்லா ரியாரே" என்று விடை கூறினள்.

ஓவியத்திற் கடவுளின் திருவுருவை எழுதுவித்துக் கண்டு மகிழும் விருப்பம் மடந்தைக்கு இருந்தமையை இவ்வாசிரியர் கூறுதலைப் போலவே சிலசில வேறுபாடுகளுடன் வெவ்வேறுபருவப்பெண்கள் அங்ஙனம் விரும்புவதைச் சில உலாக்கள் கூறுகின்றன. ஏகாம்பரநாதருலாவில் அரிவைப்பருவத்தினள் ஒரு சித்திரசாலையிற்சென்று காஞ்சித் தலசம்பந்தமான வரலாறுகளைப் புலப்படுத்தும் ஓவியங்களைக்கண்டு மகிழ்ந்தாளென்றும், திருப்பூவணநாதருலாவில் தெரிவைப்பருவத்தினள் ஓர் ஓவியனை அழைத்துத் திருப்பூவணநாதர் திருவிளையாட்டு முதலியவற்றை எழுதுமாறுசெய்து கண்டு களித்தாளென்றும், சங்கரலிங்க உலாவில் பேரிளம்பெண் பருவத்தினள் சித்திரசாலையிற்சென்று அங்கே எழுதியிருந்த சங்கரலிங்கத்தின் திருவிளையாடல்களின் உருவத்தைப் பிறருக்குக்காட்டினாளென்றும், தஞ்சைப் பெருவுடையாருலாவிற் பெதும்பைப்பருவத்தினள் ஓவியன் ஒருவனைக் கண்டு சோமாஸ்கந்தமூர்த்தியின் திருவுருவத்தைத் தீட்டித்தரச்செய்து கண்டாளென்றும் கூறப்பட்ட செய்திகளால் இவ்வழக்கத்தை அறியலாம்.

அரிவை.

அரிவையின் வருணனையில் சிலேடையொடுகூடிய தற்குறிப்பேற்ற அணி அமைந்துள்ளது. அவளுடைய கண் மானை மருட்டி வண்டைச் சிறைப்படுத்தி மீனைப் பயமுறுத்தி வனசத்தைப் பங்கமுறச்செய்து குவளையை வனத்தில் ஏற்றி வாரிதியை அதோகதியாகப் பண்ணி விஷத்திற்கு நித்யகண்டமேவும் நிலைகொடுத்து வேல்முனையைச் சத்தியிலையெனவும் கத்தியை உறையிடக்காணதெனவும் சொல்லச் செய்து கொலைக்குணத்தில் தன்னைநோக்க யமன் திருமனென்னும்

பெயரால் வழங்கச்செய்ததென்று புனையும் பகுதியில் அவ்வப்பொருள்களின் இயற்கைத்தன்மையையும் தொழிலையும் பெயரையும் வேறு பொருள்படும்படி தோற்றச்செய்து அமைத்துள்ளார். அவள் குழல், "சூரியன்வந்தாலும் நீர் என்றுவந்தீர்? என்று அஞ்சாமற் கேட்கும் இருளைப்போன்றது" என்று சொல்வதில் நகைச்சுவை காணப்படுகின்றது.

அவள் ஒரு விறலியை அழைத்துத் தேவர்களுக்குள்ளே வீரம் கருணை அழகு என்னும் மூன்றினாலும் மிக்கவர் யார் என்று கேட்ப' அவ்விறலி காமதகனம், திரிபுரசங்காரம், தக்கயாகசங்காரம், பிரமன் தலையைக்கொய்தது, அந்தகாசுர சங்காரம், காலசங்காரம் முதலிய வீரச் செயல்களைச் சொல்லிச் சிவபெருமானது வீரத்தையும்; யானை, வண்டு, சிலந்தி, பாம்பு, கரிக்குருவி, பன்றிக்குட்டிகள், எறும்பு முதலிய விலங்கினங்கட்கும் திருவருள்செய்ததைச் சொல்லி அவரது பெருங்கருணையையும்; முனிவர்களும் பெண்மையை அவாவிய பேரழகையுடைய திருமாலே பெண்ணாகி அவாவும் அழகுடையவரென்று சொல்லி அவரது அழகையும் புலப்படுத்தி, "வீரப் பெருக்கழகன் மென் கருணைச் சீரழகன், ஆரத் திருமேனி யாரழகன்" (309) ஆகிய அவரே யாவற்றிலும் மிக்கவரென்று வீணைவாசித்தல் முகமாகக்கூறினளென்ற ஒருசெய்தி காணப்படுகின்றது. இவ்வாறு பாட்டுடைத்தலைவருடைய ஏற்றத்தைப் புலப்படுத்தும்வழக்கு வேறு சில உலாக்களிலும் உண்டு. ஏகாம்பரநாதருலாவில் பேரிளம்பெண் அந்தணரொருவரைநோக்கி, "சிவபெருமான்நிலைக்கும் ஏனைத்தேவர்நிலைக்கும் வாசி கூறுக" எனக் கேட்க, அவர் சிவபெருமான்பெருமையைப் புலப்படுத்தியதாக அமைத்த செய்தியும்; திருக்காளத்திநாதருலாவில் அரிவை விறலியொருத்தியை அழைத்துப் பெண்களை ஆட்கொண்ட அழகுடைய நாயகர்களுக்குள்ளே சிறந்தவர் யாரென்றுகேட்ப அவள் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு குற்றம் கூறிச் சிவபெருமானே சிறந்தவரென நிறுவுவதாக உள்ள செய்தியும்; இரத்தினகிரியுலாவில் மடந்தை பாங்கியர்களைப்பார்த்து, 'விண்ணுக்கு மண்ணுக்கும் வேறு முலைநத்தக், கண்ணுக் கினியவராங் காவலரை எண்ணித்தான், சொல்லுவீர்" என்ன அவர்கள் சிவபெருமானே அத்தகையவரெனக் காரணங்காட்டிப் புலப்படுத்தியதாகக் கூறப்படும் செய்தியும் இவ்வகையைச் சார்ந்தனவே.

தெரிவை.

தெரிவைப்பருவத்தில் குறத்தியின்செய்தி ஒன்று சொல்லப்படுகிறது. அது வருமாறு:

தெரிவை மணிமேடையில் வீற்றிருக்கையில் குறிசொல்லும் குறத்தி ஒருத்தி அங்கே வந்தாள். அவளைக்கண்ட தெரிவை, "என் மனக் குறிப்பையறிந்து சொல்வாயாக" என்றாள். அவள், "ஒரு வருடம் சொல்வாயாக" என்றாள். "பதினோராவதுவருடம்" என்றாள் தெரிவை. அவ்வருடம் 'ஈசுவர' ஆதலின், "ஈசுவரன்பால் உனக்கு விருப்பம் இருக்கின்றது" என்றாள். பின் ஒருமாதத்தைச்சொல் என்று அவள் கூற, தெரிவை, "நான்காவதுமாதம்" என்றாள். அம்மாதம் ஆடியாதலின், "மன்றுடிமீதில் விருப்பம் உனக்கு இருக்கிறது" என்றாள். பின்னும் குறத்தி ஒருவாரத்தைக் கேட்க இரண்டாவது வாரமென்றாள். அது சோமவாரமாதலின், "நீ சோமசேகரனை விரும்புகின்றாய்" என்றாள் குறத்தி. அவர் வருவாரோ எனத் தெரிவைகேட்ப, "வந்து அவர் அருள் செய்வார்" என்று குறத்தி கூறிப் பரிசுபெற்றுச் சென்றாளென்பது.

இவ்வாறு குறத்திபாற் குறிகேட்கும்வழக்கம், உலா நூல்களுள் சங்கரசோழனுலாவில் பெதும்பைப்பருவத்தில், "தூற்று, விசும்பின் மழைகடுப்ப மெய்க்குறஞ்சொன்னாட்குப், பசும்பொன் மழைபொழியப் பார்த்தும்" எனச் சுருக்கமாகவும், தஞ்சைப்பெருவுடையாருலாவில் மடந்தைப்பருவத்தில் குறத்தி தலைவியின் கைரேகையைப்பார்த்துக் குறிசொன்னாள் என்னும்பகுதியில் விரிவாகவும் காணப்படுகின்றது.

பேரிளம்பெண்.

பேரிளம்பெண்வருணனையில் அவள்குழலைப் பிராயத்திற்கேற்ப, "இருட்டறையுட் பல்கணியி லெய்து நிலாக் கூடும், இருட்டனைநேரோடு நரை யெய்தும்—திருக்குழல்" என்பார். பூணணிதலையும் மையிடுதலையும் அவள் நீத்தவளென்பார். இவ்வாறே பிற உலாக்களிலும் காணப்படுகின்றது.

அவள் ஒரு பூங்காவை அடைந்து அங்கே உள்ள ஒவ்வொரு மரத்தையும் கண்டு அவ்வம் மரம் தலவிருட்சமாக உள்ள தலத்தை நினைந்து பாவினளென்கின்றனர். இம்முறை, திருவானைக்கா உலாவில் பேரிளம்பெண்பருவத்திலும், சொக்கநாதருலாவில் அரிவைப் பருவத்திலும் காணப்படுகின்றது.

பேரிளம்பெண் இறைவரது சேவையையேசெய்துகொண்டிருப்பவ ளென்பது பல உலாக்களிற் கூறப்படும். இவர், "பரன்சேவை யன்றிப், புதுமை விழிக்குப் பொருந்தாள்" என்பதில் அக்கருத்தைச் சிலேடையில் நன்கு அமைத்துக்காட்டுகின்றார்.

பிறதலங்கள்.

(இந்நூலில் பலதலங்களைப்பற்றியசெய்திகள் இடையிடையே கூறப்படுகின்றன.)

கடம்பவனநாதர் எழுந்தருளுகையில் இன்ன இன்ன தலத்தையுடையவர் வந்தாரென்று திருச்சின்னம் முழங்கின எனக் கூறப்படும் பகுதியில் பலதலங்களின் பெயர்கள் வேறுதொனிப்பொருள் தோற்றுகின்ற அடைமொழிகளோடு ஆளப்படுகின்றன. இதனை, 'அங்கயற் கண்ணிசார் கூடலான், ஆட்டைவிடாப் புலியூரான், சண்மதத்து மேலான தந்திவனத்தான், மண்பரவு புற்றிடத்தான், ஆவணத்து முற்றும்விலையா மென்றவன், பூவணத்து வாசப் பொருள், துன்பக்கடல் கடத்துந் தோணிபுரத்தான், இன்பவெள்ளத்து ஐயாற்றிறை, தேவி மருங்கமரும் காஞ்சிபுரன், துதிக்கைபெற்ற வாரணவாசியான், பைக்குளடங்காத மாணிக்கமலையான், ஆனந்தத்தேனை அன்பர்க் கூட்டிவைக்கும் ஈங்கோய் மலையெம் பிரானை' என்பவற்றா லறியலாகும். இப்பகுதியிற் சொல்லப்பட்டதலங்கள் முறையே மதுரை, தில்லை, திருவானைக்கா, திருவாரூர், திருவெண்ணெய்நல்லூர், திருப்பூவணம், சீகாழி, திருவையாறு, காஞ்சீபுரம், காசி, இரத்தினகிரி, திருவீங்கோய்மலை என்பன (112-9). பெதும்பை கழங்காடுகையிற் பாடுவதாக அமைத்துள்ள தலங்கள் திருவேகம்பம், திருவண்ணாமலை, திரிசிராப்பள்ளி, மதுரை, திருவையாறு, பட்டமங்கை என்பன. பின்னும் விறலியொருத்தி இறைவர்கருணையைப் புலப்படுத்தற்காக அவரை வழிபட்டு அருள் பெற்ற விலங்கு முதலியவற்றைக்கூறும்வாயிலாகச் சிலதலங்கள் குறிப்பிக்கப்படுகின்றன. அவை, திருக்காளத்தி, திருவானைக்கா, ஸ்ரீசைலம், திருவண்டுறை, திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம், திருநாகேச்சுரம், திருநாகைக்காரோணம், திருப்பாம்புரம், திருப்பாம்பணி, திருக்கேதீச்சரம், திருவாலவாய், திருக்நற்றூலம், திருவெறும்பீச்சுரம் (303—5) முதலியன.

பேரிளம்பெண், பூங்காவை அடைந்து ஒவ்வொரு மரத்தையுங் கண்டு அவ்வம்மரத்தைத் தமக்குரிய விருட்சமாகப்பெற்ற தலங்களை நினைந்து வழிபட்டதாகக் கூறும்பகுதியில் வந்துள்ளவை: திருப்பைஞ்ஞீலி, திருக்குற்றாலம், திருநெல்வேலி, திருமுல்லைவாயில், திருவேகம்பம், திருவாட்போக்கி, திருவீங்கோய்மலை, திருவாலீசம் (அயிலூர்) என்பன. அவள் இன்பத்தைப் பயிரின் விளைவாக உருவகம்செய்யும் பகுதியில், "காட்சிக் கதிர்தோன்ற, ஏமமுறு நெல்வேலி யீசரே" எனத் திருநெல்வேலி அதற்கு இயைபுற எடுத்தாளப்படுகின்றது.

கடம்பவிருட்சம், திருமணக்கோலக்காட்சி, சுந்தரனென்னும் திருநாமமென்பவற்றால், இத்தலம் மதுரையோடு ஒப்புமையுடையதாதலின், அத்தலச் செய்திகள் பல இதன்கண் எடுத்தாளப்படுகின்றன; "செல்லாருஞ் சோலைத் திருவால வாயதனில், வில்லாரு மிந்திரவி மானத்துட்—கல்லானை, சித்தாரு ளாற்கரும்பு தின்னுமந்நாட் டென்னனணி, முத்துவடம் போலுமிள மூரலாள்" (150-51) என்பதில் திருவாலவாயென்னும் திருநாமமும் இந்திரவிமானமும் கல்லானைக்குக் கரும்பருத்திய திருவிளையாடலும், "மையேந்து சோலை மதுரை நகர்க்கவுரி, கையேந்து பாலன்" (167) என்பதில் விருத்தகுமார பாலரான திருவிளையாடலும், "மீனக் கொடியன் விரைவிற் பயந்ததால்" (238) என்பதில் தடாதகைப் பிராட்டி திருவவதாரமும், "தாண்மாறி ஆட்டுவிக்கப் பாண்டியனா ரல்லவே" (260) என்பதில் கான்மாறியாடிய திருவிளையாடலும், "முன்னா ளிசைவாது சாய்ந்திடவே, எம்பிரான் கூட லிறைவனரு ளாற்செயித்த, கும்பமுலை மாமயிலே" (292-3) என்பதில் இசைவாதுவென்ற திருவிளையாடலும், "வல்லமையில் லாதகய வாய்தமக்கும்—வெல்லமரில், அன்னை யிழந்த வடலேனக் குட்டிகட்கும் .... அன்புதவி" (303-5) என்பதில் கரிக்குருவிக்கு உபதேசம்செய்த திருவிளையாடலும், பன்றிக் குட்டிக்குப் பால்கொடுத்த திருவிளையாடலும் குறிக்கப்படுகின்றன.

கடம்பவனநாதருக்குரிய தசாங்கங்கள் 360-ஆங் கண்ணி முதலியவற்றில் மடக்கணி அமையச் சொல்லப்படுகின்றன. அவை வருமாறு:— (1) மலை: கயிலைமலை, (2) ஆறு: காவிரி, (3) நாடு: சோழநாடு, (4) நகர்: கடம்பர்கோயில், (5) மாலை: கொன்றை, (6) குதிரை: வேதம், (7) யானை: அயிராவணம், (8) கொடி: இடபம், (9) முரசு: ஓங்காரம், (10) ஆணை: சந்திரன் முதலியவற்றை நிலைபெயராது ஒழுகச்செய்யும் ஆணை.

சிவபெருமான்பெருமை.

இன்னும் சிவபெருமானது பெருமைகளைப் பலவாற்றானும் எடுத்துப்பாராட்டுவார் 'சக்தியாகவும் சிவமாகவும் அருள்புரியும் தன்மையான்' (1) என்பர். மணமாகவும் மலராகவும் உள்ளவன் (3) என்று இவர் கூறுதல், "வாச மலரெலா மானாய் நீயே" என்னும் திருவாக்கையும், "உள்ளத்தி னுள்ளன் புடையார் கருத்தறியும், வள்ளல்" என்பது "மனத்து ணின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் றன்னை" என்பதையும் நினைப்பிக்கின்றன. "பட்டிமையில் லாருளத் தின் பாக்கியமே" (268) என்பதில் வஞ்சகமில்லாருடைய உள்ளத்தில் வீற்றிருக்குந் தன்மையைப் புலப்படுத்துகின்றார். "மெய்யடியான், திங்கட் சுதையெனவே செய்யுமொரு முப்பாலுஞ், சங்கத்தி னூட்டுந் தமிழ்ப்பாலன்" (167–8) என்பதனாலும், "தெள்ளுதமிழ்ச் சொல்லே, பொருளே" (380–81) என்பதனாலும் இறைவருக்குத் தமிழோடுள்ள தொடர்பைக்கூறுகின்றார்.

பொருளணிகள்.

கடம்பவனநாதர் திருவுலாப்போது தற்குமுன் திருவாடை முதலியன அணிந்துகொள்வதாகக்கூறியுள்ளபகுதியில் (59-68) சிலேடையொடு கூடிய தற்குறிப்பேற்ற அணி அமைந்துள்ளது. திலகம் தீட்டியதை, தேவியோடுசேர்ந்திருக்கச்செய்யும் மன்மதனைக் கோபித்த அக்கினியிருக்கும் வீட்டின் கதவைப் பூட்டி ஒரு முத்திரையிட்டதுபோல இருந்ததென்கின்றார். திருக்குடைநிழற்றல் முதலியவற்றைச்சொல்லும் பகுதியிலும் (77–82) அவ்வணி அமைந்துள்ளது. மங்கையர்கள் சாமரை இரட்டியது சிவபிரான் திருமுடியிலுள்ள கங்கை கிரீடத்தால் மறைக்கப்பட்டமையால் அதிற்சென்று விளையாட எண்ணிய அன்னங்கள் அதனைக்காணாமற் சுழல்வதுபோன்றிருந்தது என்கின்றார். சூரியோதயத்தைச் சொல்லுகையிலும், அரிவையின்வருணனையிலும் (274–85) அவ்வணியினமைதி காணப்படுகின்றது.

137, 147, 203, 346–7-ஆம் கண்ணிகளில் சிலேடையணி அமைந்துள்ளது. 237–9-ஆம் கண்ணிகளில் கடம்பவனநாதருக்கும் அம்பிகைக்கும் மங்கைக்கும் சிலேடையும், 337–9-ஆங் கண்ணிகளில் மன்மதனுக்கும் வேடனுக்கும் சிலேடையும் காணப்படுகின்றன. சொற்பொருட்பின்வருநிலை (73), சொற்பின்வருநிலை (125, 166–70, 225),

நிரனிறை (296–8, 318–21), என்னும் அணிகளும் இடையிடையே உள்ளன.

44–5-ஆங் கண்ணிகளில் இரதம் முதலிய நாற்படைகளின் பெயர்களும், 46-ஆம் கண்ணிமுதலியவற்றில் அரசன், மந்திரி, தளகர்த்தன், ஸ்தானபதி, ராயசத்தன், அதிகாரி, காரணிகன், கற்பித்தோன், மகாஜனன், பிரவர்த்தகன் என்னும் உத்தியோகப்பெயர்களும், 112-ஆம் கண்ணி முதலியவற்றில் வேறசிலபெயர்களும், 205-ஆம் கண்ணியில் காட்டுமோன் என்பதும் தொனியில் அமைந்துள்ளன.

பலவகையான படக்கணிகளும் (38, 40–42, 126–7, 141, 235, 247, 258, 269-71, 360-67), திரிபும் (காப்பு, 13, 32, 41, 43, 256), சந்தமும் (195–7, 226–7), இன்றியமையாத இடங்களில் வகையுளியும் (34–5, 106,146), இந்நூலிற் காணப்படும்.

சொல்லாட்சி.

மந்த்ரி (46), விக்ரமன், ப்ரபை, சக்ரம் (196), அநுக்ரகம் (197), மந்த்ரம் (217), சித்ரமணி (291) என வருவனபோன்ற ஸம்யுக்தாக்ஷரங்களமைந்த வடசொற்களையும்; தீனப்ரவர்த்தகன் (49-50), அங்குரார்ப்பணம் (52), சொர்க்க மத்ய பாதலம் (101,) பாதாதிகேசபரியந்தம் (129), சீதள சோம திவாகர லோசன, வேத சொரூப விநோத புராதன, மாருத பாவக மாதவ சாயக, மேரு சராசன வீர சரோருக பாதன் (226-8), வீரப்ரதாபவிசயம் (322) என வருவனபோன்ற வடசொற்றொடர்களையும்; வத்திரம், வர்ச்சித்து (59), தெக்கணம் (12), பிரமவத்தி (24), கெங்காதரன் (62), நாதிக்க (162) முதலிய வடசொற்றிரிபுகளையும் ஆளுகின்றார்.

வச்சு (35), ஆச்சுது (206), தணிச்சு (283) என்பனபோன்ற மரூஉமொழிகள் உரிய இடங்களில் அமைந்துள்ளன. இவர் எடுத்தாண்ட சில அரும்பதங்கள்: திண்டு (88), கும்பு தெம்பு, (141), பாணினி (விறலி) (295), சரி (346), தெரியலர் (பகைவர்) (282), உச்சிதம் (323); பொருந்த என்னும் பொருளில் ஏல என்பதனையும் (104, 177), ஒருக்கே என்னும் பொருளில் ஒருமிக்க என்பதனையும் (106, 191) நன்கமைத்தலென்னும் பொருளில் பாணித்தலென்பதனையும் (118, 252), யானையென்னும் பொருளில் ஓர்கையென்பதையும் (364 இவர் வழங்குகின்றார்.

ஆசிரியர் இயல்பு.

இத்தகைய அரியநூலை இயற்றிய இவ்வாசிரியர் சிவபக்திச் செல்வமும், சிவபெருமானது கருணையை வியந்துபாராட்டும் தன்மையும் சிவனடியார் பக்தியும், சிவதலங்களில் அன்பும், பலநூலாராய்ச்சியும் ஆசிரியபக்தியும் உடையவரென்று தெரியவருகின்றது.

இவ்வுலாவின் ஈற்றிற் காணப்படும், 'விருப்பிருக்கும்' என்னுஞ் செய்யுளால் அக்காலத்து அடியார்கள்செய்யும் திருப்பணிகளுக்குச் சில இடையூறு செய்துவந்தார்களென்றும் அதுகண்டு இவர் மிகவருந்தினரென்றும் தோற்றுகின்றது.

இந்நூல் ஏட்டுப்பிரதி ஒன்று ஏறக்குறைய 50-வருடங்களுக்கு முன்பு திருவாவடுதுறை ஆதீனத்துப் புத்தகசாலையிற் கிடைத்தது; அதனைப் பிரதிசெய்துகொண்டேன். அதுமுதல் இன்றுவரை தேடியும் வேறுபிரதி கிடைக்கவில்லை. ஸ்ரீகடம்பவனேசருடைய திருவருள் கூட்டுவித்ததனால் இப்பொழுது குறிப்புரையுடன் வெளியிடலாயிற்று.

கடம்பர்கோயில் சம்பந்தமான அரிய சில செய்திகளை அவ்வூர் ஆயுர்வேதவைத்தியர் மகா-ா-ா-ஸ்ரீ எஸ். குருசாமிமுதலியாரவர்கள் அன்புடன் விசாரித்து விளங்கச்செய்தார்கள்.

இதனைப் பதிப்பிக்குங்காலத்து உடனிருந்து பலவகையான உதவிபுரிந்துவந்த உபகாரிகளின் அன்புடைமை மறக்கற்பாலதன்று.

பல வருஷங்களாகத் தேடிச் சேகரித்துப் பரிசோதித்து வைத்திருந்தும் பலவிதமான காரணங்களால் வெளிப்படுத்தாமலிருக்கும் இதைப்போன்ற பிரபந்தங்கள் பல உண்டு. தனித்தனியே வெளிப்படுத்தினால் காலம் நீட்டிக்குமென்றும் வேறு காரணங்களைக்கருதியும் சிலகாலமாக மாதப்பத்திரிகைகள்மூலம் அவை வெளியிடப்பெற்று வருகின்றன. அவ்விதம் செந்தமிழ்ப்பத்திரிகையில் இக்காலத்து வெளிவரும் நூல்களில் இது மூன்றாவதாகும்.

சென்னை,
4—11—1933.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.